576 | 576

KALANILAYAM

தனிப்பிரதி விலை 0-2-6 அணா.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ஹு மார்ச் மீ 14 உ [No. 11

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 161
2 கம்பராமாயணம் (கிட்கிந்தைப் படலம்) T. N. சேஷாசலம் B.A., B.L. 163
3. திருவிளையாடற் கருணைத் திருவிருத்தம் S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L.. 165
4. வில்லிபாரதம்—(துரியோதனன்) K. T. விஜயராகவாச்சாரியார் B.A. 166
5. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 4-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 168
6. சூரியன் - (நக்ஷத்திரசாலை) E. T. இராஜேஸ்வரி அம்மாள், M.A. L.T. 169
7. அணியிலக்கணம் (தன்மை அணி) 171
8. புளியந்தீவு நாகேசுரர் பதிகம் சுவாலி—க. சோமசுந்தரப் புலவர் 174
9. வர்த்தமானம் 176

## கலாநிலயம்

### கடவுட் சித்தம் 8.

"மெய்ம்மை யென்று ஒன்றினை உன்னுடைய கருத்தானது நாட, அது நிச்சயமன்றேனும் அல்லது கைகூடுவதற்கு இயலாதது என்றேனும் உன் புலனறிவு மறுக்குமாயின், இவ்வறிவின் மறுப்பிற்கு நேர்மாறாகவும், அக்கருத்து நாடிய அனுபவமே மெய்யும் உய்யுந்திறமுமாமென்று நம்பவேண்டும்என்னும் ஒரு இச்சை உன்னகத்தே உளது காண்" என வில்லியம் ஜேம்ஸ் விளம்பு மிதனில் விந்தையோ யாதொன்றுமில்லை. பார்க்கப்படுவன நிழல்களேயாமென்றும் பாவனையே பொருள்களென்றும் ப்ளேட்டோ வாதித்துச் சாதித்த முடிவை முற்றிலும் அறிந்து தெளிந்து கொள்வது எளியதன்று. ஆயினும், அதன் போக்குந் தன்மையும் விளங்கவரும்பொழுதே 'எனக்கு வேண்டியது அக்கருத்துலகமே யன்றி இந்தப் புலனுலகம் அன்று அன்று" என்று நமதுஉள்ளம் முரசறைகின்றது. (இதன் உண்மையை உணர, உள்நோக்கமும் (Introspection) சுய ஆராய்ச்சியும் (Self-examintion)சிறிது பயிற்சி செய்திருத்தல் வேண்டும். இப்பயிற்சியின் தன்மையும் அவசியமும், சென்ற ஆண்டில், 'கல்சர்' என்னுந் தலைப்புடன்எழுதிய கட்டுரைகளில் விளக்கப்பட்டிருக்கின்றன). நம் அகச்செவி இவ்வதந்தியைக் கேட்டு உவக்கும்பொழுது புறச்செவியில் இதற்கு மாறான செய்திகள் வந்து தாக்குங்கால், அம்மெய்ம்மையைப் பற்றி நிலைநிற்க மாட்டாமல் சிறிதுபெரிது தடுமாறநேரலாமாயினும் அம்மெய்ம்மையையே நம்பவேண்டும் என்னும் ஓர் இச்சை ஓயாமல் எழுந்து எழுந்து நம்மை இயக்கவில்லையோ? அம்மெய்ம்மையையே நம்பிவிடுகின்றோமென்று நாம் இங்கு வற்புறுத்தவரவில்லை. ஒன்றினை நம்புவது வேறு, நம்பவேண்டுமென்று விரும்புவது வேறு. வில்லியம்ஜேம்ஸ் வற்புறுத்துவதெலாம் இவ்விருப்பத்தின் நிச்சயத்தையே யொழிய வேறில்லை. சுயஆராய்ச்சி யுடையவர் இவ்விருப்பம்அல்லதுஇச்சை தம்மிடத்தில்இருப்பதைத்தெரிந்துகொள்கின்றனர். ஏனையோர் தெரிந்துகொள்ளாராயினும், அதனால் அது இல்லாதது ஆகிவிடும் என்று எண்ணலாகாது. அவரவர் உள்ளத்தில் எல்லோர்க்கும் இவ்வதந்தி உறைந்திருக்கின்றதாயினும் ஆன்மானுபவமுதிர்ச்சியுடையோர்வாயினால்மாத்திரம்ஒலிபெற்று இது உரைக்கப்படும்.

அன்னவர்களில் ஒருவர் நம் தாயுமானவர். இவரும் இவரனைய தூய்மையும் வாய்மையும் வாய்ந்த உத்தமர் பிறர் எத்தனையோ பலரும், தம்மை, கள்வர்களென்றும், வஞ்சகரென்றும், பாவிகள் என்றும், காமுகரென்றும், பொய்யரென்றும், புலையரென்றும் பற்பலவாறு பழித்து இழிவுறப் பேசிக்கொள்வதை அவரியற்றிய நூல்களிலும் பாடல்களிலும், பற்பலவிடங்களிற்காணலாம். தூய்மையின் மேன்மையின் மூர்த்தியேயனைய இவர் நிலையே இன்னதாயின் நம்மனோர் எம்மூலை என்று அயர்வது இயற்கையே யாயினும் அந்தரம் நோக்கினால் அதன் இரகசியம் வேறொன்றாவது புலப்படும். தங்கள் தன்மையை அவர்

தெரிவித்துக்கொண்ட வாசகங்கள் அல்ல அவை. நம்மனோர்பால்வைத்த வோர் பரிவினல் தம்மையே நாமாகப் பாவனைசெய்துகொண்டு, நமது எளிமையைத் தமதாக வகித்து, நம்பொருட்டு, நமதுள்ளத்திலிருப்பதைத் தம் சொற்களால் உரைத்து நாம் உய்ய வேண்டுகின்ற உணர்வின் தோற்றமாம் அது. நம்முடைய மயக்கத்தில் பங்குகேட்பவர்போல் தம்முடைய தெளிவினை நமக்கு அளிக்கின்ற வள்ளலார் அவர். இதனை மறந்து, அவர்களே உய்ந்து உயரமாட்டாமற் கையறவெய்திக் கலங்கினர்என்று மதித்து அவரது நன்மொழிகளை வீண்போக்கிக்கொள்ளலாகாது. “யான் கற்றதுங் கேட்டதும் அவலமாயிற்றன்றே” என்பாராயினும் அவருக்கு அது அவலமாகவில்லை. நம்முடைய அவலத்தையே நயமுறப் பேசும் வகை அது. இவ்வாறு நம்முடைய நிலைமையை மாத்திரமன்றி நமது அந்தரங்கத்தில் நமக்கேயுந் தெரியாமல் உறைந்துகிடக்கின்ற இரகசியங்களையும் தம்முடைய அனுபவம்போற் பேசி வெளிப்படுத்தும் இயல்பினர் அவர். தாயுமானவர், “இரும்புநேர் நெஞ்சகக் கள்வனேன் ஆனாலும்நின்னை இறைவிட்டு நின்றதுண்டோ” என்றுகடவுளைக் குறித்து முறையிட்டுளங்கிய சொற்கள் இச்செவ்வியில் நினைவிற்கு வரும். வில்லியம் ஜேம்ஸ் வற்புறுத்துகின்ற அந்நம்பிக்கையிச்சையின் உண்மைக்கு இதனினும் சிறந்ததோர் சான்று காணலரிது. வஞ்சனையும் கள்ளமும் இரும்புநேர் நெஞ்சமும் அத்தாயுமானவர்பால் எள்ளத்தனையும் இல்லை. அவைகளேயுடைய மானுடப் பொதுத்தொகுதியின் முறையீடு இது. மானுட மனத்தில், வஞ்சமும் கள்ளமும் வன்மையும் எத்துணையிருப்பினும், அன்னவைகளுக்கு அயலில், கடவுளை இறையேனும் விட்டுநிற்கமாட்டாத நிலையும் ஒன்று உளது. அந்நிலையொன்று இருக்கின்றதென்பதையும் நாம் தெரிந்துகொள்ளாமல்காலங்கழிக்கலாம். அதனுல் அது இல்லாததாகிவிடாது. தெரியாதன வெல்லாம் இல்லாதனவும் ஆம் என்ற நியதி யெங்குமில்லை. நமது வஞ்சனை பொய் பொறாமை அகங்கார மமகாரங்களனையவைகளெல்லாம் மனதின் மேற்புறம் தென்படுகிற சில நாடக நடமாட்டங்கள்; இந்தக் கள்ளம் வெளிவேடக்கள்ளங்கள். நாம், பொய்யர் போலும், சொல்லாற் சிலபோதும் செய்கையாற் பலபோதும், கடவுளை மறுத்தவர் போலும் வெறுத்தவர் போலும் விவகரித்தாலும் இவையனைத்தும் நாமே நம்மையறிந்துகொள்ளாமல் மிகுதியாகக் காட்டுகின்ற பொய் வேடங்களேயன்றி வேறல்ல. இவ்வெளிக்கள்ளங்களெல்லாங்கிடக்க, நம்முடைய உள்ளுணர்வின் ஆழத்தில் வேறோர்கள்ளம் துள்ளிக்கொண்டிருக்கின்றது. அது தான், கடவுளில் மெய்மையிலும் நன்மையிலும் அவைகளுக்குப் பாத்திரமாகிய நம்மிலும் வைத்திருக்கின்றவோர் நம்பிக்கையாம். அந்நம்பிக்கையின் ஒளி மழுங்கி இருள்கின்ற பொழுதும், வில்லியம்ஜேம்ஸ் சொல்கின்றபடி நம்பவேண்டும் என்னும் இச்சையேனும்இடைவந்துதித்து நமது வாழ்க்கையை முழுவதும் அந்தகாரமாக்கிவிடாமற் காக்கின்றது. இந்நிலைமையின் அருமையை அறிந்துகொண்ட தாயுமானவர் “நின்னை இறைவிட்டு நின்ற துண்டோ” என்று நம்மனோர்பொருட்டு முறையிட்டார்.

எனின், தீயவராகிய சிலர் தூயவர்போல் நடிப்பதெல்லாம் பொய்க்கள்ளமே. உண்மைக் கள்ளம் யாதெனில், மெய்ந்நெறி நன்மையனது உறவினை விட்டு இறையேனும் நீங்கமாட்டாத தூயவர்களாகிய நாம் தீயவர்போல் தோன்றும்படி விவகரிப்பதுதான் கள்ளத்திற் கள்ளம் எனப்படுதல் வேண்டும். உலக நடமாட்டம் இந்த முடிவிற்கு மாறாகத் தோன்றலாம். அத்தோற்றத்தை நம்பவேண்டா; கருத்தின் அனுபவத்தையே கைக்கொள்வோம். அதுவே கடவுட் சித்தம்.

ஆம். நம்மிடத்தில் இல்லாததைக் கடவுள் கற்பனை செய்துகொள்ளச் சொல்லவில்லை; நம்மால் இயலாததை இயற்றச் சொல்லவுமில்லை; அவர் நமக்குக் கொடுக்காததைத் திருப்பிக்கேட்கவும் இல்லை. தம்மையே தமர்க்கு நல்கியிருக்கின்ற தனிப்பெருந்தகை அக் கடவுள். தந்தை தாய் தமர் தாரம் மக்கள் அனைவரினும் அதிகமும் நெருங்கியுள்ள உறவுபூண்டவர். வேறு நாம் எதுசெய்யினும் செய்யாதொழியினும் இறையேனும் அவரைவிட்டு நாம் அகன்று நிற்கலாகாது என்பது அவருடைய சித்தமாம். வரம்பில் ஆற்றலுடையவராதலால் கடவுள், அவருடைய சித்தத்தை நாம் கடக்கமாட்டாதவர்களாக இருக்கின்றோம். இதற்கு வில்லியம் ஜேம்ஸின் ஆராய்ச்சியும் தாயுமானவர்தம் உணர்வுமிக்க சொற்களும் சாக்ஷி. ஆதலாற்றான் இச்சித்தம் நமது இச்சையாய் நடைபெறுகின்றது. இது நடைபெறுகின்றதென்பதைத் தெரிந்துகொண்டு நம்முடைய வாழ்க்கையை நடத்துவதே வாழ்வாங்கு வாழ்தலாம். வேறொன்றும் வேண்டா; அவருடைய சித்தத்தை அவர் இவ்விச்சையின் மூலமாக நடத்திக்கொள்கின்றார் என்று நமது உள்ளுணர்வில் தோய்ந்திருக்கின்ற உண்மையைவெளியிலே கொணர்ந்து இவ்வுலக நடமாட்டங்களுடன் கலக்கும்படி நிறுவினாற் போதும்.

நாம் இக்கட்டுரையின் முதலில் கூறித் துவக்கியதற் கிணங்க நம்முடைய காரியங்களைக் கடவுளின் செய்கையாகக் கருதி மயங்க வேண்டா. மயங்குவதென்னில், கடவுளின் காரியத்தை நம்முடைய காரியமாகவே கருதி மயங்குவோம். அலெக்ஸாண்டர் வகுத்துரைத்தபடி, கடவுள் தன்னுடையதெய்வத்வத்தைஎய்துவதற்கு முயல்கின்றமுயற்சியின் வகைகளாக இருக்கலாம் அக்காரியங்கள். இதன்படி பகவத்கீதையின் உபதேசத்திற்கு மிக நெருங்கி வந்துவிடுகின்றோம்.

உள்ளந்தோறும் கள்வன்போல் கரந்துறைகின்ற அச்சித்தத்தின் உண்மையை, பின்னும் நாம் ஒளித்துவைக்க விரும்ப வேண்டா: விரும்பினுலும் பயன்படாது. தீயின்சுடரைப் பஞ்சுகொண்டு அவித்தவர் உண்டோ; மெய்விளங்கவரு குருநிலத்தில் இதற்கு மேல் விளம்பப் பெறவில்லை, இதற்குக் குறைந்தும் விளம்பப் பெறவில்லை.

உள்ளுணர்வைக் க[illegible] அதனில் [illegible]

m211,N28KN
199209



திருக்கின்ற கடவுட்சித்தத்தின் உண்மையைத்திரட்டிக் கொணர்ந்துதரும் நலமுடையது கலையின் பயிற்சியொன்றே யாதலின் கலாநிலயம் அதனைக் கண்ணுங் கருத்துமாய்க் காத்து வளர்ப்பதற்குரிய முயற்சிகளையே அனைவரும் மேற்கொள்ள வேண்டுமென்று இத்துணை வேண்டிக்கொள்கின்றது. “அர்ச்சுன, என்னுடைய காரியம் இது, இதனைச் செய்” என்றென்று ஈசுவரன் தன்னுடைய சித்தத்தை, இடைவிடாமல் பேசிக்கொண்டிருக்கின்றான். கலையுணர் வென்னும் அக்கம்பியில்லாத் தந்தியே அத்திப்பியச் சொற்களை நம் செவியகங் கொணர்ந்து சேர்க்கும். கலையுணர்வு முதிர்ந்தவர் அனைவரும் எந்நாளும் எத்தேயத்திலும் அவ்வொரு வதந்தியையே நமக்கு வழங்கிவருகின்றனர்.

---

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தா காண்டம்—10. கிட்கிந்தைப் படலம்

[150-வது பக்கத் தொடர்ச்சி]

### தாரை யிருந்த தகவிலாக் கோலம்.

அண்ணனைக் கொல்வித்த வொரு பாதகன் என்று முன்பின் பாராமல் அச்சுக்கிரீவனைக் கொன்று தீர்ப்பான் தன் தம்பி என்பதை அவன் இயற்கையினுல் மட்டுமன்றிச் சீற்றமுடைய தோற்றத்தாலும் கண்டுணர்ந்த இராமன், அன்னதொன்று மங்குச் சாதிக்காமல் திரும்பும்படி இலக்குமணனுக்கு ஆணைதந்து அனுப்பலாயினுன். அன்னவாறு இராகவன் ஆணையிடற்குரிய சிந்தனை இலக்குமணனிடத்தில் நிகழ்ந்ததென்பதை, அவன் தன்மையினின்றும் தற்பொழுது நின்ற நிலையினின்றும், கம்பரது நூலின்கண் அனுமானித் தறியவேண்டியிருக்க, வடமொழிவான்மீகத்தில் அதுதான் வெளிப்படையாகத் தெரியநிற்கின்றது. அதனையும் இங்கு உடன் ஓதலாம்:—

“லக்ஷ்மண, நதிகளினிடையில்உள்ள மணற்குன்றுகளில் அன்னம், வெள்ளைநாரை, சக்கரவாகம் அன்றில் முதலிய பக்ஷிகள் நிறைந்து விளங்குகின்றன பார். ஒருவரோடொருவர் வயிரங்கொண்டு ஒருவரை யொருவர் வெல்லவெண்ணும் அரசர்கள் யுத்தத்திற் சாயத்தம் செய்வதற்கேற்ற காலம் வந்துவிட்டது. இதுவே அரசர்கள் படையெடுத்துச் செல்லற்குச் சிறந்தகாலம்; சுக்கிரீவன் அதற்கேற்ற முயற்சிஒன்றும் செய்வதாகக் காணவில்லை. சீதையைக் காணுது சோகமுற்றிருக்கும் எனக்கு இந்த மழைக்காலத்து நான்கு மாசங்களும் நூறு வருஷங்கள் போலக் கழிந்தன.

“காட்டிலே சக்கரவாகப் பறவை தன் பர்த்தாவைத் தொடர்ந்து செல்லுமாறுபோலச் சீதை, கொடிய தண்டகாரணியத்தை ஓர் உத்தியானவனம் போல எண்ணி என்னைத் தொடர்ந்துவந்தாள். அப்படிப்பட்ட மனைவியைப் பிரிந்து, இராச்சியத்தையும் இழந்து, காட்டிற் கனுப்பப்பட்டுத் துன்பமடைந்த என்னிடத்தில், லக்ஷ்மண, சுக்கிரீவன் கிருபைசெய்யவில்லை. அநாதனையும், இராவணனுல் வெல்லப்பட்டவனையும், தீனனையும், தூரதேசத்தானையும், வேட்கையுற்றவனையும், தன்னைச் சரணடைந்தவனையும் இருக்கின்றமையால் நான் வானரர்ராஜனுகிய கெட்டபுத்தியையுடைய சுக்கிரீவனுக்கு அவமதித்தற் காளானேன். அவன் சீதையைத் தேடுவதற்குக் காலம் நியமித்துவிட்டு அது வந்துவிட்டதை அறியாம லிருக்கின்றான். ஆதலால் நீ கிஷ்கிந்தைக்குச் சென்று சிற்றின்பத்திலேஆழ்ந்திருக்கின்ற மூர்க்கனுன சுக்கிரீவனுக்கு நான் சொன்னதாகச் சொல்:- முன்னர் நன்றிசெய்தவர்கள் தன்னை யடைந்து [illegible] நிற்கும்போது அவர்களுக்கு ஆசைகாட்டி உதவி [illegible] உலகத்தில் மனுஷர்களுக்குள் கடையானவன். தான் சொன்னசொல்லால் நன்மையுண்டாயினும் தீமையுண்டாயினும் அதைச் சத்தியந் தவறுமல் ஏற்றுக்கொள்பவனே வீரன்; அவனே மனுஷர்களுக்குள் உத்தமன். தான் விரும்பியதை அடைந்துவிட்டு அவ்வாறு தாம் விரும்பியதை அடையாத தன்மித்திரர்களுக்கு உதவிசெய்யாத நன்றிஅறிதலில்லாத ஒருவன் இறந்தால் அவனது பிணத்தை நாய்நரிகளுங்கூடத் தீண்டமாட்டா. சுக்கிரீவன் யுத்தஞ்செய்வதன்பொருட்டு விளக்கப்பட்ட பொன்னுலாகிய புறத்தினையுடைய எனது வில்லின் மின்போன்ற ரூபத்தைக் காண விரும்புகின்றானென்பது நிச்சயம். நான் கோபங்கொண்டு பாணப்பிரயோகஞ் செய்யும்போது இடிமுழக்கம் போன்ற எனது நாணிஞேசையைக் கேட்க அவன் விரும்புகின்றனன் போலும். வீர, என்னுடைய பராக்கிரமத்தையும் நீ எனக்குத் துணையாயிருப்பதையும் நன்றுயறிந்திருந்தும் அவனுக்கொரு சிந்தையுமில்லை. அவன் தன்காரியம்முடிந்தபின் நாம் ஒருவரோடொருவர் என் நட்புப் பூண்டோமென்பதை மறந்துவிட்டான். மழைக்காலம் கழிய வருவேனென்று பிரதிக்ஞை செய்துவிட்டு நான்கு மாசங்களை அவன் வி[illegible]யாடிக் கழித்துவிட்டான். அவன் அமாத்தியர்களோடும் பரிவாரங்களோடுஞ் சேர்ந்து விளையாடிக் களியாட்டயர்கின்றானே யன்றி, சோகத்தால் வருந்தும் எங்களிடத்துச் சிறிதும் தயை செய்கின்றானில்லை. பெருவிறலாய், நீ சுக்கிரீவனிடம் போய் நான் கோபமுற்றுச் சொன்ன இந்த வார்த்தைகளை அவ்விதமாகவே சொல்:- சுக்கிரீவ, வாலி சென்ற வழி இன்னும் அடைபட்டுப் போகவில்லை; ஆதலால் நீ சொன்ன சொல்லில் தவறுதே; வாலியைப் பின்றொடர்ந்து நீயும் போகாதே. வாலி ஒருவனையே யான் சரத்தினுல் யுத்தத்தில் கொன்றேன்; சத்தியந் தவறின உன்னை உன் சுற்றத்தாரோடும் கொல்லுவேன். இவ்விதமாக நீ அச் சுக்கிரீவனுக்கு எங்கள் காரியத்தில் சொல்லவேண்டியவைகளெல்லாவற்றையும் சொல்லு. காலமோ ஆகிவிட்டது; வாக்குச்செய்த தர்மத்துக் கழிவில்லைஎன்பதை நன்றுயுணர்ந்து, உன் சத்தியத்தைத் தவறுதுசெய்; எனது பாணத்தாற் கொல்லப்பட்ட வாலியை யமலோகத்திற்குச் சென்று காணவேண்டாம்.”

தமது தமையன் இவ்விதமாகக் கோபமுற்றுப் புலம்பி வருந்துவதைக் கண்டு இலக்ஷ்மணர் சுக்கிரீவனிடத்தில் அதிக கோபங்கொண்டார்.

சீதையின் பிரிவினுல் வருந்திச் சோகத்தல் மீ[illegible]ப்பட்டு அறிவழிந்து கோபத்தினுல் இவ்வாறு [illegible]மரை இலக்ஷ்மணர் நோக்கி “அந்த வானரன் [illegible] சென்ற வழியிற் செல்லான்; [illegible] யறியான்; தன் அரச [illegible]

னில்அவனுடையபுத்தியோ அன்னவைகளில் செல்லமாட்டாது. அவன் உம்முடைய கருணையினுற் செல்வத்தையடைந்து, புத்திக்குறைவால் சிற்றின்பங்களில் ஆழ்ந்து, செய்த நன்றியை மறந்துவிட்டான்; அவனைக் கொன்று வாலியைப்போய்க் காணும்படி செய்வோம்; அவனுக்கு இராச்சியமேற்றதன்று.என்னுடையபெருங்கோபத்தைத் தாங்க என்னுல் முடியவில்லை; சத்தியந் தவறின சுக்கிரீவனை இன்றைக்கே கொல்லுகின்றேன்; வாலியின்புத்திரனுகிய அங்கதன் வானரசேனைகளோடு உமது பத்தினியைத் தேடட்டும்" என்றுசொன்னுர். இவ்விதமாகத் தமதெண்ணத்தைக்கூறி மிகுந்தகோபமுற்று வில்லைத் தன் கையிலெடுத்துக்கொண்டு எழுந்த லக்ஷ்மணரை இராமர் நோக்கி, நயவசனமாக, "லக்ஷ்மணு, உன்னை ஒத்தவர்கள் உலகத்தில் இவ்விதமானபாபத்தைச்செய்யமாட்டார்கள்; பாபத்தைத் தனது நல்லறிவால் நீக்கிவிடுபவனே வீரன்; அவனே புருஷோத்தமன். இத்தகைய காரியம் நல்லொழுக்கத்தையுடைய நீ செய்யத்தக்கதன்று; சுக்கிரீவனிடத்தில் நாம் முன்னேசெய்த நட்பைப் பாராட்டவேண்டுமன்றே? காலந்தப்பிவிட்டானுயினும் அவனிடத்தில் நீ கொடிய சொற்களைச் சொல்லாமல் நல்லஇதமானசொற்களையே சொல்லு" என்றுர்."

இன்னதோர் தன்மையனுகிய இலக்குவன் நகர்ப்புறம் வந்து தோன்றுதலும் அவனைக்கண்ட வானர வீரர்கள் அனைவரும் வெருவியோடி அங்கதன்பால் சென்று சாற்றினுர். அவன் இலக்குவனுக்கருகுவந்து நோக்கிய அளவில் முகக்குறியினுல் அகத்தின்கருத்தைஅறிந்துகொண்டு, உற்றதுரைத்து உரியன செய்யும்வண்ணம் தன் இளையதந்தை சுக்கிரீவன் இருந்தவிடம் ஏகினுன். அன்னகாலை, திருவிற்றொடர் போகபௌவத்தைக் கடக்கமட்டாமல் சுக்கிரீவன் அதனிலாழ்ந்து கிடந்த காட்சியைக் கம்பர் ஏழு கவிகளில் எடுத்துக் கூறுகின்றுர்:—

நளனி யற்றிய நாயகக் கோயிலுட்
டளம லர்த்தகைப் பள்ளியிற் றூழ்குழ
விளமு லைச்சிய ரேந்தடி தைவர
விளைது யிற்குவி ருந்து விரும்புவான்

[விச்வகர்மாவின் குமாரனுகிய நளன் என்னும் வானர வீரன் கட்டிய முதன்மையான அரண்மனையினுள், இதழ்கள் அடர்ந்த மலர்கள் பரப்பிய படுக்கையில், தொங்குகின்ற கூந்தலையும் இளமையான முலைகளையும் உடைய மாதர்கள் தனது ஏந்தியகால்களைத் தடவிப்பிடிக்க,விளைகின்ற தூக்கத்திற்குத்தான் விருந்தினன் ஆக விரும்புகின்றவனும்]

தெள்ளி யோருத வப்பெருஞ் செல்வமாங்
கள்ளி னுலதி கங்களித் தான்கதிர்ப்
புள்ளி மாநெடும் பொன்வரை புக்கதோர்
வெள்ளி மால்வரை யென்ன விளங்குவான்

[தெளிந்த அறிவுடையவர்களாகிய இராமலக்ஷ்மணர்கள் அளித்ததனுல் பெற்ற பெருஞ் செல்வமாகிய கள்ளினுல் அதிகம் களித்தவனும், ஒளிகளின் தொகுதியையுடைய மிகப்பெரிய பொன்மலையில், புகுந்து தங்கிய ஒரு பெரிய வெள்ளிமலைபோல விளங்குபவனும்]

சிந்து வாரந் திருநறை தேக்ககில்
சந்த மாமயிற் சாயலர் தாழ்குழற்
கந்த மாமலர்க் காடு [illegible]
மந்த மாருதம் வந்து [illegible]

[சிந்துவார மரம் சுகந்தக் கொடி தேக்குமரம் அகில் மரம் சந்தனமரம், சிறந்த மயில்போன்ற சாயலையுடைய மாதர்களது தொங்குகின்ற கூந்தல், வாசனை பொருந்திய சிறந்தமலர்வனங்கள் ஆகிய இன்னவைகளின் வழியாகத் தாவிய இளங்காற்று, வந்து தன்மேல் வீசும்படி அமர்ந்திருப்பவனும்]

தித்தி பாநின்ற செங்கிடை வாய்ச்சியர்
முத்த வாண்முகை முள்ளெயி றூறுதேன்
பித்த மாலும் பிறவும் பெருக்கலான்
மத்த வாரண மென்ன மயங்கினுன்

[தித்திக்கின்ற செங்கிடை போன்ற உதடுகளையுடைய மாதர்களது முத்தைப்போன்ற ஒளிசெய்கின்றபுன்சிரிப்பையுடைய கூரிய பற்களினின்று சுரக்கின்ற இரஸமானது, பைத்தியத்தையும் மயக்கத்தையும் இது போன்ற மற்றவைகளையும் அதிகப்படுத்துவதால், மதங்கொண்ட யானையைப்போல மோகித்தவனும்]

மகுட குண்டல மேமுதன் மண்டலத்
தூருநெடுஞ்சுடர்க் கற்றை யுலாவலாற்
பகல வன்சுடர் பாய்பனி மால்வரை
தகம லர்ந்து பொலிந்து தயங்குவான்

[மகுடம் குண்டலம் முதலிய ஒளிமண்டலங்களிலிருந்தெழுந்து வீசுகின்ற மிகுந்த ஒளிகளின் தொகுதி தன் உடல்மேல் படர்வதால், சூரியனதுகிரணம் பாயப்பெற்ற பெரிய பனி தோய்ந்த இமயமலைபோல விளங்கிப் பிரகாசிப்பவனும்]

ஆகி அச்சுக்கிரீவன் கிடக்கலானுன். துயிலிற்கு விருந்தாக மயல்கொண்ட அவ்வானரவேந்தன் வந்துநின்ற அங்கதனை எங்ஙனம் அறிவான். முசுகுந்தன் அஞ்சியது முற்றிலும் உண்மையாயிற்று. அறிவிற் சிறந்தவர்களாயினும் இராமலக்ஷ்மணர்களவனுக்கு இப்பெருஞ் செல்வமாம் கள்ளினை ஏன் ஊட்டினுரென்னவே கம்பர் சிறிதளவு வியக்கின்றுர். தன் அருளைப் பெறுந் தகுதியில்லோர்க்கே கடவுள் பொருள்களைக் கொடுக்கின்றுர் போலும். முசுகுந்தனைப் போல் அவ்வருளையே வேண்டுவோர், கடவுள் கொடுக்க வந்தாலும் அப்பொருளை மறுப்பார் போலும். ஊசியின் காதின் வழியாக வோர் ஒட்டகம் புகுந்து சென்றுலும் செல்லலாம், மற்று, செல்வமுடையவர்களோ ஒருபொழுதும் உய்ந்து கடைத்தேற இயலாது என இயேசு கிறிஸ்து இயம்பிய வாசகத்தைச் சுக்கிரீவனதுசெய்தி இங்கு நினைவுசெய்துதருகின்றது. அன்னவனை யணுகிய அங்கதன்,

எந்தை கேளவ் விராமற் கிளையவன்
சிந்தை யுண்ணெடுஞ் சீற்றந் திருமுகந்
தந்த ளிப்பத் தடுப்பரும் வேகத்தன்
வந்தனன் னுன்மனக் கருத்தி யாதென்றுன்

[என் தந்தையே கேள், அந்த இராமனுக்குத் தம்பியானவன் மனத்திலுள்ள பெருங்கோபத்தைத் தன் அழகிய முகங் காட்டித்தர, தடுக்கமாட்டா வேகமுடன் இங்கு வந்திருக்கின்றுன். இவ்விஷயத்தில் உன் கருத்து என்ன, என்றுன்]

புறத்திலிருந்து ஓர்பெருஞ்செல்வம் நெருக்கவும், உள்ளிருந்து நறுங்கள் உழக்கவும், கிடந்த அச்சுக்கிரீவன், அங்கதன் உரைத்தவொன்றும் உணர்ந்திலன். மற்றினி, இவனது கருத்தை அறிவதற்குக் சுக்கிரீவ



பதன் பயனின்மையை அறிந்துகொண்ட அங்கதன் அவ்விடம் விட்டு நீங்கி அனுமன்பால் அணுகி, அவனுடன், தனதுஅன்னையாந் தாரையின் கோயிலை எய்தினுன்.

ஆம், தாரை தனித்தொரு கோயிலிலிருந்தனள். மற்று வான்மீகரது நூலின் நினைவே நிறைந்த மனத்தினர், தாரையைக் காணுதற்கு வேறெங்குச் செல்லல் வேண்டும் இவ்வங்கதன் என்ன வியப்பினும் வியக்கலாம். ஏனெனில்அவ்வடநூலின்படி அங்கதன்வந்த போது, சுக்கிரீவன்ஏகாந்தத்திலே தாரையுடன்கூடிக் காமவின்பத்தி லாழ்ந்திருந்தான். நற்பெரும் வாலியோடுவாழ்ந்தஅவ்வானரத்தி இந்தப்பொழுது அவ்வாலியைக் கொல்வித்த தம்பியோடுசிற்றின்பத்தில் ஆழ்ந்துகிடக்கிறுள். ஓரகத்தியாயிருந்த ருமையோடு சக்களத்தி யாக நயந்தனள். அவள் எவ்வாருயினும் ஆகுக ; பேதை அங்கதனேனும் அதனைத் தன் கண்களாற் காணுனுயின் கோடி பெறும்: மற்று, அனைத்தையும் உள்ளது உள்ளபடியே உரைக்கக்கற்ற வான்மீகி முனிவர், தாயின் தகவின்மையைத் தனயன் கண்களினின்று மறைக்கக் கருதினு ரல்லர்; அங்கதனை அவ்விடத்தே கூசாமற் கொணர்ந்து சேர்த்துவிட்டார். அங்கதனும் அக்காட்சியைக் காணப் பின்னிடவில்லை. தன் சிற்றப்பனுடைய பாதங்களைத் தொட்டு, பின்னர்த் தன் தாயின் பாதங்களைப்பிடித்து, அதன்பின் ருமையின் பாதங்களைத் தடவி, அவர்களுக்கு நடந்த காரியங்கள் எல்லாவற்றையும் சொன்னுன்- இது வடநூல் வகுத்த முறை.

---

# திருவிளையாடற் கருணைத் திருவிருத்தம்

திருவால வாயர்சவுந் தரநாத ரங்கயற்கண்
[1]தேவி பாகர் [சுருக்கி
விரிவாகச் செய்தவெண்ணெண் விளையாட றனைச்
விருத்தப் பாவாற் [யிற்
பரிவாகச் [2]சொல்வதற்குப் பொற்பதும மலர்க்கரை
பண்பால் வைகும் [ள்
மருவார்ந்த பிறைமவுலிச் சித்திவிநா யகன்மலர்த்தா
வழுத்தல் செய்வாம். 1.

பொன்னுலகத் திமையவர்கோன் பழிநீக்கி வெள்
சாபம் போக்கி [ளானைச்
மன்னுகடம் பாடவியை மாமதுரா புரமாக்கி
மகம்பு ரிந்த
தென்னவற்கு மகளாகி மூன்றுமுலை யுடன்றிக்கு
விசயஞ் செய்து
கன்னிதனை மணம்புணர்ந்து[3]முடிதரித்துநடம்புரிந்த
கருணை வாழ்வே. 2.

குறட்பூத முண்ணவன்ன மளித்துவைகை நன்னீருங்
கொடுத்து வெற்றித்
திறத்தேழு கடலழைத்து மாமியையு [4]மதிலாட்டிச்
செல்வ வுக்ர
விறற்பாண்டி யனைத்தந்து வளைசெண்டு வேலவனுக்
குதவி வேலை
[5]கறுத்துவேல் விடுத்துமுந்நீர் மாற்றுவிக் குஞ்
கருணை வாழ்வே. [சொக்கே

வாசவன்றன் முடிசிதற வளையெறிந்து மேருவினின்
மகரந் தீட்டித்
தேசுறுபொன் கொணரநல்கி மறையுரைத்து ரத்நம்
செய்து சால [விலை
வீசுதிரைப் பரவைதனை விழுங்குவித்து நான்மாடக்
கூடல் வேய்ந்து [க்கே
காசினியோர் [6]புகழ்வவெல்லாம் வல்லசித்தரானசொ
கருணை வாழ்வே. 4.

சிலைவேழ வேழமுணச் செயதுகரி [7]கிரியாக்கிக்
கெவுரி சித்த
மலையாது மூன்றுவடி வமுங்காட்டி மாறிநடம்
புரிந்து மாறுக்
கொலையான [8]பழிக்கஞ்சி மும்மைகெட்ட பாதகன்
கொடுமை மாற்றிக் [றன்
[9]கலைகாக்குங் குருநிந்தைசெய்தானை யங்கம்வெட்டும்
கருணை வாழ்வே. 5.

நாகத்தை நாகமென [10]நன்கமைத்துப் பசுவைமலை
யாக நாட்டி
நீகர்த்த னெனநம்பு சவுந்தரசா மந்தனுக்கு
நிரைத்துச் சேனை
[11]மேகத்து மீனவனுக் குலவாத கிழிவழங்கி
விரும்பு மாதர்க் [சொக்கே
காகப்போய் வீடுதொறும் [12]கனகவளை தொடுத்த
கருணை வாழ்வே. 6.

மங்கையருக் கட்டசித்தி வழங்கிச்சோ ழன்றனக்கு
வடக்கு வாசற்
சங்கையறத் திறந்துதெரி சனங்காட்டி விடைக்குறி
தரித்துச் சாத்தித் [யுஞ்
துங்கமுடி[13]மேற்றண்ணீர் சுமந்தே பொன்னனை
துயரந் தீரக் [யாள் தன்
கங்கைசடைக் [14]கரந்தசித்த வடிவான சுந்தரனே
கருணை வாழ்வே. 7.

செம்பியனை மடுவில்விழச் செய்துதொலையாக்கோட்
சுமந்து சேர்த்து [டை
நம்புசெட்டி[illegible]ப் பெண்[illegible]க்கா வழக்கில்வென்ற
ந[illegible]டி [illegible]ல்கி [பொருளனைத்தும்
வெம்புவா குணன்றனக்குச் சிவலோகங் காண்பித்து
விறகுந் தாங்கிக்
கம்பமுறு பத்திரற்குத் திருமுகமு மீந்தசொக்கே
கருணை வாழ்வே. 8.

---

[குறிப்பு:—இத்திருவிருத்தங்கள் இதுகாறும் அச்சில் வெளிவந்தனவாகத்தெரியவில்லை. மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதஅய்யரவர்கள்'சந்தனமுட்'என்ற திரு விருத்தத்தைச் சில பாடபேதங்களுடன் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தின் இறுதியிற் பதிப்பித்திருக்கின்றுர்கள். இதனுல் இச்செய்யுட்கள் போற்றத்தக்கன வென்பதில் ஐயமில்லை. கலாநிலயத்தின் வாசகர்கள் கற்று இன்புறுவார்களென்று எண்ணி இப்போதுமுழுவதும் வெளியிடப்படுகின்றது.ஆசிரியர்பெயர் முதலியன தெரியவில்லை.— எஸ். வையாபுரிப்பிள்ளை.

(பிரதி பேதம்)—1 செல்வி. 2 செய்ததற்குப். 3 முடிதரித்த...சொக்கே. 4 ங்கடலாட்டி. 5 கறுத்தேவக் கிடமுந்நீர் மாற்றுவித்த.

(பிரதி பேதம்)—6 புகழவெல்லாம். 7 கரியாக்கி. 8பழியஞ்சி. 9 கலைகாட்டுன். 10 வக்கமைத்து. 11 வேகத்தின். 12 அங்கைவளை. 13 மேலாந்தண் ணீர்சுமந்து பொன்னனையாள் துயரந் தீர்த்து. 14 கனிந்தசித்த.

பாணற்குப் பொற்பலகை பாலித்து மனைவியிசைப்
பகைவெல் வித்துப்
பூணப்பன் றிக்குமுலை கொடுத்துமதி மந்திரியாப்
பொருந்த வைத்துச்
[15]சேனுற்ற கரிக்குருவிக் குபதேசஞ் செய்துவந்த
செங்கா னரை
காணத்தன் கதியளித்துப் பணியால் நான்[16]கெல்லை
கருணை வாழ்வே. [கண்ட

ஒருவாளி யாற்சோழன் வலிதொலைத்துத் தமிழ்ப்
புயர்ந்தோர்க் கீந்து [பலகை
தருகாஞ்ச னக்கிழியைத் தருமிக்குத் தருவித்துச்
சார்ந்த கீரன்
வெருவாமற் கரையேற்றிக் குறுமுனியாற் செந்
[17]விளங்க வைத்துக் [தமிழை
கரைகாணுப் புலவரிகல் ஊமனால் மாற்றுவித்த
கருணை வாழ்வே. 10.

வடவால வாயமர்ந்து வலைவீசி மாணிக்க
வாச கர்க்குத்
திடஞான குருவாகி நரிபரியாக் கிப்பரியை
நரியா[18]ய்ச் செய்தே
அடலாறு வருவித்து மண்சுமந்து வழுதிசுர
மகற்றிப் புத்தர்க்
கடிதான கழுவேற்றி வன்னிகிணறழைத்தசொக்கே.
கருணை வாழ்வே. 11

*சந்தன முட்டிட முழங்கை தானுரைத்துச்சாத்தியர
சளித்து நூலோர்
செந்தமிழைப்பாதிபகிர்ந் துரைசெய்துபுலிமுலையைச்
சிறிய புல்வாய்
வந்தருந்த வருள்புரிந்த மாமதுரை யங்கயற்கண்
மணவா ளாசீர்க்
கந்தமலர்க் கடம்பவன மேவுசுந்த ரேச்சுரனே
கருணை வாழ்வே. 12.

[19]இத்தகைமை லீலைதனையடியவர்க்காச் செய்தருளு
மிறைவா யாங்கள்
முத்தநகை மீனவிலோ சனையாடன் பொற்பாத
முழுது நம்புங்
கொத்தடிமைப் பரம்பரையா[20]மடிச்சேரியாதலினாற்
கருணை கூர்ந்து
சித்திரமிரங் கிக்காக்கக் கடனுகுந் தென்மதுரைத்
தேவ தேவே. 13.

(பிரதி பேதம்)—15 சேணிற்றுன் புறுகுருவிக்.16கெல்கைகொண்ட 17 விளக்குவித்து.

* இந்தச் செய்யுள் சென்னை அரசாங்க நூல் நிலயத்திலுள்ள ஏட்டுப் பிரதியிற் காணப்பெறவில்லை. இதற்கு மாறுகச் 'செம்பியனை' என்ற 8-வது செய்யுள் உள்ளது.

(பிரதி பேதம்)—18 யாக்கி. 19 இத்தகைய. 20 யருள் சேருமா.

# வில்லி பாரதம்

## இராசராசன் துரியோதனன்

### வீடுமனும் சுயோதனனும்

[157-பக்கத் தொடர்ச்சி]

இவ்வாறு, சுயோதனனிடம் வீடுமனுக்கு உள்ள பரிவு காணக்கிடக்கிறது. ஆனால் அத்தகையோனிடம் சுயோதனனுக்கு எத்தன்மையான உணர்ச்சியிருந்தது என்பதை ஆராயினன்றோ அவனது பண்பினைப் பின்னும் செவ்வனே அறிந்துகொள்ள இயலும். ஒருவரிடத்தும் பாசமென்பதில்லாமல் தனது வெற்றியின்மீதே வெறிகொண்ட எந்திரமனைய வாழ்க்கை வாழ்ந்தவன் சுயோதனனென்றல்லவா இதுவரையில் காட்டினேன்? ஆயினும் பாசமென்பது சிறிதேனும் இல்லாமலிருப்பது மனித இயற்கைக்குப் பொருந்தாதென்பதைக் காட்டவே போலும் அவனுக்குக் கன்னன்மாட்டிருந்த பரிவு தெற்றென விளக்கப்பட்டிருக்கின்றது. கன்னனிடம் கொண்டது போலவே வீடுமனிடமும் சுயோதனன் சிறிது நல்லுணர்ச்சிகளைச் செலுத்திவந்தானென்பதை ஆராய்வது சுவைதரும் ஒரு விஷயமாகும். ஆயினும், அப்பரிவு அவ்வீடுமன் உயிருடனிருந்தவரையில் வெளிப்படையாகத் தோன்றவில்லை யென்பதும் உண்மை. எட்டுநாளளவும் போர்வெல்லக் காணாததால், சுயோதனன் கன்னனிடம் சென்று, போரிடும்படி வேண்ட, மற்றவன், 'வீடுமன் தோற்றுப் புறக்கவ்வட்டும்; அன்றே நினக்குஞாலம் தருவன்' என்று கூறிய புல்லுரைகளை வீடுமனிடம் சொல்லும்படி தன் தம்பியைச் சுயோதனன் ஏவினனன்றோ? அவனும் பாவம், ஒருவாறு முகிழ்த்து, 'ஒருநாளும் நீவிர் பொறுமின்கள்' என்றான். இவ்வாறு துச்சாதனன் கூறியதற்கு முதலே வீடுமன் இவனது கருத்தையறிந்து,

நூல்வரு பழுதில் கேள்வி
தும்பியும் நீயு மிந்த
நால்வரும் குறித்த வெண்ணம்
நாளையே தெரியு மையா

என்னக் கூறினன். வாழ்க்கையெல்லாம் யாருக்காக உழைத்தானோ அவனே இவனது முடிவை வேண்டி நின்றால் அதனினும் இரக்கமான தொன்று ஏது? உணர்வு போனிடத்துப் பாசத்தை உந்த, அறிவு அதனை விலக்க, இவ்வாறு ஒரு பெரும்போர், அணைந்த எரிமலை போன்ற அவ்வீடுமனது உள்ளத்தில் நிகழாநின்றது. ஆயினும் அன்பின் ஆற்றல் அதிகம்; மலைகளையும்விடச் சக்திவாய்ந்த தன்றோ அது?

ஆதலின் சுயோதனனது பகையற்ற மனத்திலும் அவ்வன்பு பரிவென்னும் குழவியை ஈன்றது. தனது வாழ்க்கையளவில் வீடுமனைப் பொதுவாகக் கௌரவிப்பதன்றி அவனது சொற்களைச் சிறிதேனும் ஏற்றிடாத இராசராசன் பத்தாம்நாள் வீடுமன் பட்டபோது, ஆவியாய்ப் போன அப்பெரியோனது உள்ளக் குறிப்பையுணர்ந்து நடந்துகொண்டது வியக்கற்பாலதே. சாகுந்தறுவாயில், கன்னனிடம் கொண்டுள்ள வெறுப்பெல்லாவற்றையும் மறந்து, தான் தனது மனத்தினின்றும் பகையைக் கடிந்தவாற்றை



எடுத்துக் காட்ட, வீடுமன், கன்னனைச் சேனாதிபதியாக்குக' வெனச் சுயோதனனிடம் மொழிந்தான். கன்னனை என்றைக்குச் சேனாதிபதியாக்கி மனத்துக்கிசைந்த போர்புரியப் போகிறோம் என்று வீடுமனது வீழ்ச்சிக்காகக் காத்திருந்த துரியோதனன் உடனே அவ்வாறு செய்யச் சம்மதித்தானல்லன். வாளியணையில் தன் பிதாமகன் அமர்ந்திருந்த காட்சியைக் கண்டதும், தன்னுடைய எந்திர மனைய ஒரு வாழ்க்கையைப் பரிவென்னும் அமுதம் சூழ்ந்திருந்ததையறிந்தான். அறிந்தவுடன் தனக்காக வருந்திய அச்செம்மலின் உள்ளத்தின்படியே இயற்றுவோம் என்று மனம் துணிந்து, சாகுந்தறுவாயில் அவன் ஏதோ கூறினானாயினும் அவனுக்குக் கன்னனைச் சேனாதிபதியாக்குவதில் விருப்பமில்லையாதலின் அவன் அதிரதமுறை வகுத்தவாறே; அடுத்தபடியாகத் துரோணனையே நியமித்தான்.* துரோணன்போர் ஐந்து நாட்கள்நடக்கவும், வீடுமன் குறித்த காலக் குறிப்பிற்கேற்ப, ஐந்தாம் நாள் அவன் படவும், வீடுமனிடம் இராசராசன்கொண்ட பரிவும் ஆர்வமும் பன்மடங்குபெருகியது*. பதினேழாம் நாள் அங்கர்கோனுக்கு வேண்டும் உதவிகள் அமைத்து அவனுடன் போர்முனைக்கேகி மகிழ்ச்சியுடன் அக்கன்னனைப் பார்த்து நின்றான்; அப்போது செருக்குமிக அவன் 'விதுரன் வில்லொடித்தாலென்; இன்று கன்னன் நமக்கு வெற்றியளிப்பானென்று நினைத்தவனாய் 'விதுரனும் வெஞ்சிலையிறுத்துப் பின்னும்,

யதுகுலத் தலைவ னான இராமனும் தானும் பாரில்
நதிமுதல் தீர்த்தம் யாவும் ஆடுவான் ஆய்ந்து
போந்தான்.

என்று பெருமிதத்துடன் தொடங்கினான்; தொடங்கியவன் உடனே வீடுமன் இறந்ததை நினைத்துக்கொண்டதும் சிறிது துணுக்குற்றான். கலங்காத நெஞ்சத்தவனாயினும், விவேகியாதலின் அவனால் உண்மையை அறியாமலிருக்க முடியவில்லை. உள்ளம் நிறைந்த சொற்களே அவன் வாயினின்று வருவனவாம்.

கங்கைதன் வயிற்றிற் றோன்றித்
தாதைதன் காதல் தீர்ப்பான்
எங்களுக் கரசும் வாழ்வும்
இருநில முழுதும் தந்து
வெங்களத் துதயன் போல
வீடுமன் களத்தை யெல்லாம்
செங்களப் படுத்தி மீண்டும்
தேவரில் ஒருவ னானான்

என்னும் உரைகள் அவனது உள்ளம்கவர்ந்தெழுந்தோங்கிய சொற்களே யன்றி உணர்ச்சியில்லாமல் உபசாரமாகக் கூறப்பட்ட வார்த்தைகள் அல்லவாமென்பது வெளிப்படை. பின்னர்த் துரோணனைப் பற்றி,

அருமறைக் கயனை யொப்பான்
அடற்சிலைக் கானை யொப்பான்
திருவருட் கரியை யொப்பான்
திருத்தகு வீடு சேர்ந்தான்

என்றீ புகழ்ந்தான். உண்மையில் துரோணன் அப்புகழ்ச்சிக்கு முற்றிலும் உரியவனே; எனினும் அப்புகழ்ச்சியை அவன் பெறவேண்டியது பாண்டவர்தம் மிடமிருந்தன்றி, துரியோதனனிடத்தல்ல. அடற்சிலைக் கானையொப்பான் என்று புகழவேண்டியவன் கிரீடி; திருவருட் கரியை யொப்பா னென்று புகழவேண்டியவன் தருமன்; ஏனெனில் பின்னவனது அறம் பாழாகு மென்றன்றோ தன் உயிரையும் ஈந்தான் அவ்வள்ளல்? ஆனால் துரியோதனனுக்கோ, துரோணன் கிரீடியை வியூகத்தில் போரின்றி விட்ட சதியே தான் மனக்கண்முன் தோன்றும்; ஆதலின் சுயோதனன் கூறியது உண்மையென்றாலும் அவன் கூறிய உண்மை தன்னையு மறந்து கூறியதாகும். வீடுமனைப்பற்றி மிக்க உணர்ச்சியுடன் கூறும்பொழுது அவன்மாட்டே மனம் ஊன்றியிருந்தமையினால் பொங்கி யெழுந்த உணர்ச்சிகளைப் பிறருக்குக் காட்டாதிருக்கும்வண்ணம் அவன் துரோணனைப்பற்றி ஏதோ உபசாரமாகமொழிந்தானென்றே கொள்ளத்தகும். இவ்வாறாக, ஆவியாய்ப்போன அவ்வீடுமனது நினைவும் வாழ்க்கைநெறியும் சுயோதனன் உள்ளத்தை நிரப்பி அவனுக்கு ஒருவாறு உண்மையையும் தெளிவித்தன. ஆதலின் கன்னனது சயத்திலும் ஐயங்கொண்டு, அப்போது ஒருவாறு தன்னைத் தேற்றிக்கொண்டு

சாமளத் தடம்புள் ளூர்திச்
சேயலால் தேவர் வாழ்வு
தேவருக்கி யாவ ரீந்தார்
நீயலாற் பின்னை யென்னை
நிலையிடற் குரியா ருண்டோ

என்று உருவக மொன்றில் 'தஞ்சம்' புகுந்தனேனும் உண்மையில் மனோதிட மகன்றுதானிருந்தான். பாவம், வீடுமன் ஆவியாய்ப் போனபின்பாவது அவ்வன்னெஞ்சில் ஆன்மசிந்தனை யென்னும் அமுதம் தெளித்தானென்று அவ்வீடுமனையே வியக்கவேண்டும்.

* வீடுமன் வகுத்த முறை: வீடுமன் துரோணன் அசுவத்தாமா பூரிசிரவன் என்னும் நால்வர் அதிரதராவர். இவர்களில் அசுவத்தாமன் கன்னனால் பேதிக்கப்பட்டதனால் அவனுக்குச் சேனாதிபத்தியம் முதலிலே மறுத்தாயிற்று. பூரிசிரவன் பதினான்காம் நாள் சாத்தகியால் கொலையுண்டான். ஒரு பகலில் மலைவன் யான், இருபகலிலே மலைவன் உபநிடத விற்கை முனியும், ஐம்பகலில் மலைவன் பரிதிமைந்தன், என்று வீடுமன் கூறியதுபோல் தான்பத்து நாளும் துரோணன் 5 நாளும், கர்ணன் 2 நாளும் முறையே போரியற்றினார்.

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

[152-வது பக்கத் தொடர்ச்சி]

7-ம் பத்து 4-ம் தசகம்

1-ம் பாசுரம்

*ஆழியெழச் சங்கும் வில்லு மெழத்திசை*
*வாழியெழத் தண்டும் வாளு மெழவண்டம்*
*மோழை யெழமுடி பாதமெழ வப்ப*
*னூழியெழ வுலகங் கொண்ட வாறே.*

அவதாரிகை :—திருப்பேரைக்குத் தனியாக வானும் சென்று எம்பெருமானோடு உடனே தானே கலவை செய்வேனென்று பிடிவாதம் கொண்டு, ஓர் பிராட்டியின் பாசுரத்தால் தோழிமாரையும் அன்னைமாரையும் நிர்ப்பந்தித்த ஆழ்வார் இத்தசகத்தின் பாசுரங்களாலே எம்பெருமானின் பூர்வ திவ்விய சரித்திரங்களை நினைந்து வெகு உற்சாகத்துடன் கொண்டாடுவது எப்படி யென்று கருதினால்: வேட்டைக்குப்போன பகவான் திரும்பி இக்கரைக்கு எழுந்தருளியதைக்கண்டு தம் தீவிர விரஹவியஸனத்தை நிச்சேஷமாய் ஆழ்வார் மறந்துவிட்டாரென்று கொள்ளவேண்டும். முதல் பாசுரத்தில் ஆழ்வார் திவ்விய ஸம்பவங்களை யநுபவிக்கிறார்.

உரை :—ஆழியெழ - பகவானின் திவ்விய ஆயுதமான சக்கரமானது, எம்பெருமான் தமது திருவடியால் பதினாலுலோகங்களையுமளக்க எழுந்த ஸமயத்தில் எங்கேயும் ஹிரணியன் மஹாபலி முதலான அசுரசக்கரவர்த்திகளின் படைகளாகிய அசுரர்நலிவு செய்யா திருக்கக் காப்பு நிமித்தம் கிளர்ச்சியோடு ஜ்வலித்துக்கொண்டு ஆகாயத்தில் கிளம்பியதை ஸ்மரித்து அநுபவிக்கின்றபடி; சங்கு வில்லு முதலான பகவானின் மற்றைய ஆயுதங்களும் ஸமயோசிதமறிந்து எழுந்தன. திசை வாழி எழ- பத்துத் திக்குகளிலும் மஹரிஷிகளும்தேவர்களும் பகவானுக்குஜயகோஷம் செய்து வாழி வாழியென்று கட்டியங்கள் கூறினர். வாளும்-பகவானுடைய கைவாளும், தண்டும் - தண்டென்னும் ஆயுதமும், எழ - கிளம்ப, மோழை எழ- பகவானின் திருவபிஷேகம் சிருஷ்டிமுழுவதும் மூடி அதற்கு ஆபரணமாகஇருக்கின்ற(Gaseous envelope) அண்டபித்தியைத் தூக்க. நீரிற் குமிழியிடுவது போல் கொப்புளமாகக் கிளம்பினதாக ஆழ்வார் திருக்கண்களின் அநுபவம்சொல்கிறபடி. முடிபாதம் எழ - திருமுடி திருப்பாதம் எழ, அப்பன்- உலகங்களுக்கெல்லாம் தந்தையேயாகிய பகவான்.

ஊழிஎழ - வாமநாவதாரத்திற்குப் பின் ஏற்பட்ட உலக இயல்பு ஒரு கல்பம் சென்று மாறி மற்றொரு கல்பம் வந்ததுபோல், என்று ஒருவாறுகப் பொருள் கூறலாம். ஆனால் ஆழ்வார் திருவுள்ளத்தில், "இவ்வவதாரம் பழைய கல்பத்தை யழித்து ஒரு புதிய கல்பத்தை உலகங்களுக்கு ஏற்படுத்தியது" என்றுகருதினார். (as marking a new epoch in the history of the Government of all the worlds) அசுரசக்கரவர்த்திகள் அநீதிராஜ்ஜியம்தொலைந்தது, கொடுங்கோல் மன்னர்கள் பிடைகள் அகன்று தேவதைகளின் ஆதிபத்தியம் 14 லோகங்களிலும் பரவியதால் அவைகளுக்கு ஒருவனது மனம்போன போக்காய் நீதிவழுவு ஏற்பட இடமில்லாமல் நீதிநூல் வழுவாத செங்கோல் திரும்ப ஸம்பவித்தது என்று திருவுளப்பட்டுரைக்கிறபடி. அப்பன் உலகம் கொண்டான்-எம்பெருமான் எல்லா உலகங்களையும்பலியை ஜயித்துக் கைபற்றி ஸத்திய ஸங்கல்பமுள்ள தேவதைகள் ஆளுகைக்குத் திரும்பிக் கொடுப்பதை விவரிக்கிறபடியை ஸவிஸ்தாரமாய்ப் பகுதி பகுதியாய்த் தொகுத்துக் கூறுகிறபடி. அசுர சக்கரவர்த்திகளில் பலிசக்கரவர்த்தி இராஜ்ஜியம்நீதியாய்நடத்தினாலும் மனம் போகும் போக்கைச் சாஸ்திர நீதி ரீதிகளால் கரைகடக்க வொண்ணாதுஎன்று சட்டதிட்டங்களாலேற்படுத்தி அவைகளுக்கு இணங்கப் படிந்து நடக்க நிர்பந்தபட்டவனல்ல. இதுபற்றி வழுவுகளேற்பட்டு அஹங்கார இறுமாப்புகளால்உலகங்களுக்குத்தீங்கு இயற்றுவது ஸம்பாவிதமாகும். பழங்கள் செவ்வையாய்ப் பழுத்தபிறகு கொய்யாமல் விட்டுவைத்தால் மூப்பில் அழுகுதல் நேரிட்டுச் சுவரூபக்கேடு ஸம்பவிக்குமென்ற கருத்தினால் பகவான் பலியை யாசித்தாவது உய்வித்தானென்று திருவுள்ளம். உலகிற்கு நீதி ராஜ்ஜியம் வருவிக்கவே வாமநாவதாரம் பகவானெடுத்ததின் உட்கருத்தென்று ஆழ்வார் திருவுள்ளம்.

---

2-ம் பாசுரம்

*ஆறு மலைக்கெதிர்ந் தோடு மொலியர*
*வூறு சுலாய்மலை தேய்க்கு மொலிகடன்*
*மாறு சுழன்றழைக் கின்றவொலி யப்பன்*
*சாறு படவமுதங் கொண்ட நான்றே.*

இப்பாசுரம் தேவதைகளுக்காக அமிர்தம் ஏற்படப் பாற்கடலைக் கடைந்ததைக் கூறுகிறது.

பதக் குறிப்புகள்:-அரவு + ஊறு + சுலாய்-வாஸுகி என்ற சர்ப்பத்தினுடையஉடலைச்சுற்றி. கடல் மாறு சுழன்று அழைக்கின்றன - கடல்கள் தங்கள் தங்கள் ஸ்தானம்விட்டு இடம்மாறி மற்றொரு கடலைத் தாக்கி அதினிடத்தைக் கவர்ந்துகொள்ளுதலால்ஏற்பட்ட, ஒலி - ஆரவாரம், சாறுபட - பாலில் சூக்ஷ்மமாய் அக்கத்திலிருக்கும் வெண்ணெயைக் கடைந்து திரட்டுவதுபோல்.

குறிப்பு:—"ஒலி"-எவ்வளவு ஆச்சரியமாய்"கிளம்பியது" என்ற பயனிலை தொக்கி நிற்கிறது.

---

3-ம் பாசுரம்.

*நான்றில வேழ்மண்ணுந் தானத்தவே பின்னும்*
*நான்றில வேழ்மலை தானத்தவே பின்னும்*
*நான்றில வேழ்கடல் தானத்தவே யப்ப*
*னூன்றியிடந் தெயிற்றிற் கொண்ட நான்றே.*

அவதாரிகை:—ஆழ்வார் இப்பாசுரத்தில் வாராகாவதாரத்தில் பிரளயத்தில் அண்டபித்தியில் வீழ்ந்து ஒட்டிக் கிடந்த மலைகள் கடல்கள் உள்பட [illegible] உலகத்தையும் அவை அவை தன்[illegible] இடத்தில் [illegible]



மூழ்கிப் போகுமுன்னர் எப்படிக்கெப்படி அமைந்திருந்தனவோ அவ்வண்ணமே பிரளயார்ணவத்தில் மேலே தூக்கி ஸ்தாபிதத்ததைப்பற்றி வியந்து அநுபவிக்கிறார்.

குறிப்புகள்:—நான்றில-(மேலே தூக்கி நிலைநிறுத்தினவளவில்) - இடப்பெயர்ச்சி உண்டாகவில்லை. ஏழ் மண்ணும்-ஸப்த தீவுகளும் மற்றுள்ளவையும் இடப்பெயர்ச்சி அடையவில்லை. அப்பன்-மஹா உபகாரங்களை உலக ஹிதத்தின்பொருட்டு வேறொருவர் கேளாதிருக்க ஆயாசமில்லாமல்இயற்றிக்காப்பாற்றும் எம்பெருமான்; ஊன்றி - இரண்டு திவ்விய கொம்புகளால் எடுத்து நிலைநிறுத்தி, இடந்த எயிறு- தூக்கின கொம்புகளால், அவன்கொண்ட நான்றே- எம்பெருமான் தூக்கி ஸ்தாபித்தபோழ்து.

---

# சூரியன்

## IV. நக்ஷத்திரசாலை

### (அமைப்பும், நடைமுறையும்)

[159-வது பக்கத் தொடர்ச்சி]

சில தூர திருஷ்டிக் கண்ணாடிகள்:-தற்காலத்தில் உள்ள பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் இரண்டு. ஒன்று அமெரிக்காவில் காலிபோர்னியா பட்டணத்தில், வில்ஸன்மலை நக்ஷத்திர சாலையில் (Mount Wilson Observatory, California) உள்ளது. மற்றொன்று, பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள விக்டோரியா நக்ஷத்திர சாலையில் (Victoria Telescope, British Columbia) உள்ள தூரதிருஷ்டிக் கண்ணாடி. இவ்விரண்டும் பிரதிபிம்ப தூரதிருஷ்டிக்கண்ணாடிகளாகும். வின்சன்மலையிலுள்ள கருவியின் கண்ணாடிக் குறுக்களவு 100 அங்குலம். அங்குள்ள அவ்வியந்திரத்தினெடை 100 டன் அல்லது 9000 மணங்கு. இதனை 100 அங்குலத் தூரதிருஷ்டிக் கண்ணாடிஎன்றே வழங்கிவருகின்றனர். இங்கிலாந்தில் கிரீன்விச்சு நகரிலும் (Greenwich) ஜர்மனியில் பர்லின் (Berlin)நகரிலும்,ஸ்காட்லாண்டில் எடின்பரோ(Edinborough) நகரிலும் பிரான்ஸ் தேசத்தில் பாரிஸிலும் (Paris), ரஷ்யாவில் பெட்ரோக்ராட்டிலும் (Petrograd), ஆப்பிரிகாவில் கேப் ஆப் குட் ஹோப்பிலும் (Cape of Good Hope), ஜப்பானில்டோக்யோவிலும்,(Tokyo), சீனதேசத்தில் ஹாங்காங்கிலும் (Hongkong) இன்னோரன்ன பலவிடங்களிலும் அரசாங்க நக்ஷத்திர சாலைகள் ஏற்பட்டுள்ளன. இவை இக்காலத்தில்முக்கியமாகச் சூரியன்,கிரஹங்கள், நக்ஷத்திரங்கள்,நக்ஷத்திரக்கரு (Nebulae) என்ற இவற்றை ஆராய்வதற்கென்றே எழுந்தவை. பொழுதின் அருமையைக் கண்ட நமது மேல்நாட்டுச் சகோதரர்கள் நமது வாழ்நாட்களில், இமைப்பொழுது போன்ற அற்பகாலத்தையும், கற்பகாலம்போலப் பயன்படுத்தவேண்டிப் பெருமுயற்சிகள் செய்துவருகின்றனர். சென்றமுப்பது ஆண்டுகளில், மின்சாரத்தினால் நமது பூலோகத்தில் நேர்ந்திருக்கும்மாறுபாடுகளைக் காண்போமானால், ஒரு பெரிய அண்டமாகிய அரண்மனையில்வசிக்கும் ஈயினுக்கு ஒப்பிடக்கூடிய ஒரு மனிதன், இத்தகைய அரிய பெரிய காரியங்களைச் செய்வது என்ன ஆச்சரியம் என்று வியப்படைவோம். இக்காலத்தில் [illegible] தாயுமானவர் கூறியதுபோல்,

*[illegible] மதக்கரியை வசமா நடத்தலாம்;*
*[illegible] வெம்புலி வாயையுங் கட்டலாம்;*
*ஒருசிங்கம் முதுகின்மேற் கொள்ளலாம்;*
*கட்செவி எடுத்தாட்டலாம்;*
*வெந்தழலின் இரதம்வைத் தைந்துலோகத்தையும்*
*வேதித்து விற்றுண்ணலாம்;*
*வேறொருவர் காணாமல் உலகத்துலாவலாம்;*
*விண்ணவரை ஏவல் கொள்ளலாம்;*
*சந்ததமும் இளமையோ டிருக்கலாம்; மற்றொரு*
*சரீரத்தினும் புகுதலாஞ்;*
*சலமேல் நடக்கலாங் கனல்மே லிருக்கலாந்*
*தன்னிகரில் சித்திபெறலாஞ்*
*சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற*
*திறம் அரிது.*

நமது ஆசைக்கோர் அளவில்லை. பாரின்மீது உலாவுவதும் நீரின்மீது ஓடுவதும், ஆகாயத்தில் பறப்பதும் போதவில்லை. வெல்ஸ் (H. G. Wells) என்ற ஆங்கிலப் புலவர் கனாக்கண்டு எழுதிய கதைகளில் சில மெய்யாகவே நிகழக் காண்கிறோம். பிறகிரகங்களுக்குப் பிரயாணம் செய்வதைப் பற்றியும் அவர் கனாக் கண்டுள்ளார். இன்னும் ஐம்பது வருஷங்களுக்குப் பின்னர், நமது சகோதரர்களும் சகோதரிகளும், ஏதோ ஒரு நூதனயந்திரத்திலேறி வெள்ளி அல்லது செவ்வாய்க் கிரகத்திற்கு யாத்திரையாகச் சென்றாலும் செல்லலாம். அதற்காகத்தானோ இக்காலத்தில் இக்கோளங்களின் தன்மைகளை மிகுநுட்பமாக ஆராய்கின்றனர்? இக்காலத்தவர் பலர், உயிருடன் வாழ்ந்து தம் வாழ்நாள் முடிவதற்கு முன்னரே அத்தகைய புஷ்பக விமானத்திலேறிச் சென்று அக்கிரகங்களது அற்புதக் காட்சிகளைக் கண்டுவரலாம்.

தூரதர்சினி யாரோஹணம்:— தூரதர்சினியாகிய தூரதிருஷ்டிக் கண்ணாடி பல அளவினது. நச்சுக்குழல் என நாம் வழங்கிவருவது மிகச்சிறியது. 100 அங்குலக் கண்ணாடியைநோக்க இதுசூரியனுக்குள் திர்மின்மினியாகும். ஒரு தூரதிருஷ்டிக்கண்ணாடி எவ்வளவு பெரியதாக இருக்கிறதோ அவ்வளவுக்களவு அதிலே தோன்றும் பிம்பமும் உருவிலே பெரியதாகவும், நுட்பமான உறுப்புக்களையும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுவதாகவும் விளங்கும். ஆகையால் நக்ஷத்திரசாலையிலுள்ள தூரதிருஷ்டிக் கண்ணாடி என்பது நம்முடைய மூக்குக்கண்ணாடியைப்போல மடித்துச் சட்டையில் செருகிக் கொள்ளக்கூடியதல்ல. குதிரைப் பந்தயத்தையும் பந்தாட்டத்தையும் காண்பதற்காக நாம் உபயோகிக்கும் இரட்டைக் குழற்கண்ணாடி (Binoculars)[illegible]

டுக் கழுத்திலேதொங்கவிட்டுக்கொள்ளக்கூடியதல்ல. கையிலே தூக்கிவைத்துப்பார்க்கக்கூடிய கருவியல்ல. உருவத்திலும் எடையிலும்பெருத்து விலை யுயர்ந்து விளங்குதலால், அதனை வெகு சாக்கிரதையாகப் பயன்படுத்தவேண்டித் தனியிடத்தே அமைப்பர்.

நிரக்ஷ ரேகாரோஹணம்:—நக்ஷத்திரசாலைகளில் தூரதிருஷ்டிக் கண்ணாடிகளை எவ்வாறு ஸ்தாபித்திருர்கள் என்று ஆராய்வது இன்றியமையாததாகிறது. இரண்டுவிதமாக அமைக்கின்ற வழக்கமுண்டு. வானத்தையும் அதன் காட்சிகளையும், மரம் செடி முதலியன மறைக்காதபடி ஓர் உயர்ந்த இடத்தே, மூடித் திறக்கக்கூடிய உருவில் மச்சுவட்ட மண்டபம் (Dome) என்னும் கோபுரம் கட்டி, அதனிலே ஒரு உயர்ந்த மேடையின்மீது அடிவானத்தின் ஓரத்தை முழுதும் சுழன்று சுற்றி நோக்கூடிய நிலையிலே தூரதிருஷ்டிக் கண்ணாடியை எத்திசையிலும் திருப்ப முடியுமாறு அமைப்பது ஒரு முறை. இவ்வாறு ஸ்தாபிப்பதனை நாடிமண்டல அலங்கரிப்பு அல்லது நிரக்ஷரேகா ரோஹனம் என வழங்குகின்றனர். இத்தகைய தூரதிருஷ்டிக்கண்ணாடியால் எச்சமயத்திலும் எப்புறத்திலும் நாம் பார்க்க விரும்பிய வானக்காட்சியைக் காணலாம்.

துருவரேகாரோகணம்:—மற்ருெரு வகையான அமைப்பைச் சிலர் உச்சிவட்ட அமைப்பு அல்லது உச்சமண்டல அலங்கரிப்பு அல்லது துருவ ரேகாரோகனம் (Meridian mounting) என வழங்குகின்றனர். நமக்கு நேரே காணும் வானத்தின் உச்சி நிலையாகிய ஒரு புள்ளியை வட துருவத்தோடும் தென் துருவத்தோடும் சேர்த்து வானத்தே ஒரு கோடு கிழிப்போமாயின் அக்கோடு உச்சமண்டலத்தைச் சுட்டும். வடதுருவ அடிவானத்திருந்து தென் துருவ அடிவானம் வரை இந்த நக்ஷத்திரசாலையில் ஒரு பிளவு நேரே வளைவாகத்தோன்றும். அதன் வழியே இந்தத் தூரதிருஷ்டிக் கண்ணாடியையும் அந்த உச்சஸ்தான மண்டலக் கோடை நோக்கினற்போல, அக்கோடு சென்றவழியே மட்டும் வடக்கிருந்து தெற்குவரை திருப்பலாம். இவ்வாறு அமைந்துள்ள இக்கருவி, ஆகாயத்தைச் சுட அமைந்த நீண்டதொரு பெரிய பீரங்கிபோலத் தோன்றும். உச்சமண்டலமான அந்தத் துருவ ரேகையின் வழியேமட்டும் திருப்பமுடியுமேயன்றி வேறு பக்கங்களில் அதனைத் திருப்ப இயலாது. பல நாழிகை வரையிலும் காத்திருந்து, எதிர்பார்த்திருந்த கோளம் உச்ச நிலையில் தரிசனம் ஆனவுடனே மிக விரைவாக அதனை இத்தூரதிருஷ்டியின் வழியே நாம்காணவேண்டும். சாதாரணமாய் இவ்வாறு காண்பதற்கு இரண்டு நிமிஷங்களுக்குமேல் அவகாசம் இருப்பது அரிது. அச்சமயத்தைக் கைவிட்டால் மறுநாள் வரையும் காத்திருக்க வேண்டியதுதான். உச்சநிலையைத் தாண்டியபிறகு கோளங்களை இத் தூரதிருஷ்டிக் கண்ணாடிகொண்டு காணமுடியாது. உச்சநிலையிலன்றி வேறு நிலையைக் காண இக் கருவியைத் திருப்பமுடியாதபடி யன்ருே அமைத்துள்ளார். இவ்வமைப்பில் உச்சஸ்தானத்தை ஒரு கோளம் எப்போது அடைகின்றது; எப்போது அதி யுச்சநிலையில் ஏறுகின்றது; எப்போது உச்சநிலையைக் கடக்கின்றது; இந்த வெவ்வேறு நிலைகளை அடைவதற்கு எவ்வளவு போதாகின்றது என்றெல்லாம் கணக்கிடுவதற்கு இக்கருவி பெரிதும் பயன் படுகின்றது. ஒருகோளம் உச்சநிலையடைந்தபின், எவ்வளவு பொழுதானபின் வேறொரு கோளம் உச்சி நிலை யடைகின்றது; இவ்வளவு பொழுதாயின் இவை ஒன்றிற் கொன்று எவ்வளவு தொலைவில் உள்ளன என்று இத்தகைய ஆராய்ச்சிக்கும் இத்தூரதிருஷ்டிக் கண்ணாடி இன்றியமையாததேயாம். நாழிகையை ஸ்புடம் செய்து பொழுதைச் சரிவரத்திருத்தி விளக்குவதற்கும் இந்தக்கருவி சிறந்த துணையாகும். நாள்தோறும் சூரியன் சந்திரன் முதலியகோளங்கள் ஆகாயத்தில் நிலைமாறுவதை இக்கருவி மிகத்தெளிவாக நமக்கு எடுத்து விளக்கும். ஒளிமிக்க நக்ஷத்திரக்களை ஆராய்வதற்கும் இக்கருவியை வானசாஸ்திரிகள் உபயோகிக்கின்றனர்.

தூரதிருஷ்டிக் கண்ணாடியும் சூரிய ஆராய்ச்சியும்:— தூரதிருஷ்டிக் கண்ணாடிகளைக் கொண்டு சூரியனைப் பரிக்ஷிக்க வேண்டுமாயின் அக்கருவியை அப்படியே உபயோகிக்க முடியாது. இதிலே நாம் காணும் சூரிய விம்பம் மிகச்சிறியதாய் இருப்பினும் ஒளியோ பன்மடங்கு மிக்குத் திகழ்கின்றது. அத்தகைய உருவத்தை நேரே நோக்குவோமாயின் நமது கண்கள் கெட்டுப்போய்விடும். இஃதன்றியும் சூரிய கிரணங்கள் ஒளியை மட்டுமன்றிச் சூட்டையும் உடன்கொண்டுபரவுகின்றன. ஆகாயத்தே பரந்து வருகின்ற உஷ்ண கிரணங்களை ஒருமுகமாகக் குவிப்போமாயின் அங்கு உண்டாகின்ற உஷ்ணம் மிக விரைவில் அக்கண்ணாடியையும் உடைத்தெறியும். சிறுபிள்ளைகள், நண்பகலில் தம் நண்பர்கையிலே துவரம்பருப்பை எடுத்துக் காட்டுவதாகக் கூறி யாடுகின்ற விளையாட்டு ஒன்று உண்டு. பழய மூக்குக்கண்ணாடியின் வில்லை ஒன்றை எடுத்து நம்பிவந்த ஓர்நண்பரின் புறங்கைமீது வெயிலிலே பிடிப்பர். சூரியனுடைய கிரணத்தை ஒருமுகப் படுத்திக் கைமீது வீழ்த்தியபோது சூரியனுடைய பிம்பம்கொழுந்துவிட்டெரியும் அக்கினித்துண்டுபோல் 'சுறீல்' என விழும். சிறிதுபொழுது அப்படியே வெயிலில் கையை வைத்திருந்தால் கொப்புளமும் உண்டாகும். அதைக் கண்டு 'ஈதோ துவரை ஈதேதுவரை' எனச் சிறுவர்எல்லாம் கைகொட்டியாடுவர். அந்தச் சூரியவிம்பத்தின் உஷ்ணத்தினை அறியவிரும்பினல், அவ்வாறு ஒருமுகப் படுத்திய பிம்பத்திலே, மண்ணெண்ணெயில் தோய்த்த ஒரு சிறு புஞ்சை வைக்க வேண்டுவதுதான்; உடனே அது தீப்பிடித் தெரியக் காண்போம். தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியே சூரியனை நேரே கண்டால் இவ்வாறு கெடுவதோடு கண்ணாடியும் உடைந்து போகும்; ஆகையால், தூரதிருஷ்டிக் கண்ணாடியைச் சூரிய ஆராய்ச்சி செய்கின்ற காலத்தில் கதிரவன் ஒளி இக்கருவிக்குள் பிரவேசிப்பதற்கு முன்னர்ச் சுத்தமான பளிங்கிறைற் செய்த கறுப்பு ஒளிவிலக்குகளைக் கொண்டு ஒளியின் பகுதியை மழுக்குவது இன்றியமையாததாகும். சந்திரன் நக்ஷத்திரம், கிரகங்கள் இன்னோரன்னவற்றைத் தூரதிருஷ்டிக்கண்ணாடியால் பார்ப்பதற்குஇவ்வாறு முன்னெச்சரிக்கை இருக்கவேண்டிய அவசியம் இல்லை. நேரே ஓடுகின்ற சூரியஒளியன்றோ தூரதிருஷ்டிக் கண்ணாடியை நமக்குத் தந்துளது. அதனுதவிகொண்டு அதனைக் காண்பதும் ஒரு வியப்பேயன்றோ?

சோதி யாக நிரம்பிய பேரொளி
பேர றியாத புவனங்கள் போயினும்
தேர றியாத் திசைவெளி யாகியும்
ஆர றி [illegible]

[illegible]



# அணியிலக்கணம்

[158-வது பக்கத் தொடர்ச்சி]

## 2. தன்மையணி

[ஸ்வபாவோக்தி யலங்காரம்]

B. சாதித் தன்மை:—

அணியிலக்கண நூல்கள் வடமொழியிலுந் தமிழிலும் காட்டியிருக்கின்ற உதாரணங்களைக் கொண்டு எதனைத்தான் சாதித்தன்மை என்று கொள்ளலாம் என நிச்சயமாகக் கூற இயலவில்லை. ஒவ்வொரு பொருளும் ஏதேனும் ஒரு சாதியைச் சேர்ந்ததே ஆகையால், ஒருபொருளை உள்ளபடி வருணித்திருக்கின்ற வருணனையை, அப்பொருளின் தனி வருணனையாகக் கருதும்போது பொருட்டன்மையாகவும், அது சேர்ந்திருக்கின்றஇனத்தின் வருணனையாகக்கருதும்போது சாதித்தன்மையாகவுங் கொள்ளலாம். தண்டியலங்காரமும் வீரசோழியமும், பொருட்டன்மை நவிற்சியணிக்கு உதாரணமாகச் சிவபிரானது வருணனையைக் கூறியிருக்கின்றன. சிவபிரான் திருமால்பிரமன் என்னும்மூன்று தேவர்தாம் ஒரு சாதியையுஞ் சேராதவர். ஒருகால், இந்திரன், வருணன், அக்கினி அனைய சில குறிப்பிட்ட தேவர்களுக்கும் சாதியில்லையென்று கூறலாம். ஆகையால், இப்படி ஒரு சாதியையும் சேரமாட்டாமல் தனித்திருக்கும் ஒன்றன் வருணனை தான் பொருட்டன்மை நவிற்சிஎனலாகும் என்ற முடிவிற்குவரலாமோ என நாம் ஐயுறவேண்டியிருக்கின்றது. முன்கூறிய குகனது வருணனை, குகனைப் பொருந்தியமட்டில் பொருட்டன்மை நவிற்சியணி யென லாகலாமெனினும், குகனென்ற பெயரைக் குறிக்காமற் கூறினல் அதுவே, வேட்டுவ சாதியின் தோற்றத்தை வருணிப்பதாகிவிடும். மாறனலங்காரத்தில் இவ்வணிக்குக் கூறப்பட்டிருக்கின்ற பாகுபாடும் இவ்வையத்தை ஒருவாறு வலியுறுத்தக் காண்கின்ருேம்.

மாறனலங்காரத்தின்படி இவ்வணி ஒன்பது வகைப்படும்:—(1) பொருட்டன்மை-[(a) ஆண்பால் பொருட்டன்மை (b)பெண்பால்பொருட்டன்மை)| (2) மக்கட்டன்மை (a) ஆண்பால் மக்கட்டன்மை. (b)பெண்பால் மக்கட்டன்மை,(3)உயிருள்ள அஃறிணைத்தன்மை [(a) இயங்குமஃறிணைத்தன்மை (b) இயங்கா அஃறிணைத்தன்மை](4)உயிரில் அஃறிணைத் தன்மை, (5) சினைத்தன்மை,(6)வினைத்தன்மை. (7) பண்புத்தன்மை. (8) இடத்தன்மை. (9) காலத் தன்மை.

இந்நூல், பொருட்டன்மையில், ஆண்பாலுக்குத் திருமாலையும் பெண்பாலுக்குத் திருமகளையும் வருணித்து அவ்வருணனையை உதாரணமாகக் காட்டியிருக்கின்றது. எனின், திருமால் திருமகள் அனைய, ஒருசாதியிலும் சேரமாட்டாத பொருளையே, இத்தன்மைநவிற்சியணியின் பாகுபாட்டிற்குரிய பொருளாகக் கொள்ளலாம் போலும். அதுவுமன்றி,'பொருள்' என்பதனை அங்ஙனம் பிரித்து, மக்கட்டன்மையை வேறு பிரிவாகக் கூறுவதுடன், அதற்குக் காட்டியிருக்கின்ற வுதாரணங்களும், ஒரு சாதியை வருணிப்பனபோல் நிற்கின்றனவேயன்றி, ஒருபொருளினது உருவினைத் தனித்து வருணிப்பனவாகத் தோன்றவில்லை.

ஆண்பால் மக்கட்டன்மைக்கு உதாரணமாக அந்நூலிற் பின்வருஞ் செய்யுள் காணப்படுகின்றது.

> முப்புரிநூன் மார்பினன் முக்கோல்கைக்
> கொண்டுளான்
> பொய்ப்புலனை வென்ற பொறையுடையான்
> —மெய்ப்பொருளைச்
> சேவிக்கு நுண்ணுணர்வான்
> சீநிவா தன்றமியேன்
> ஆவிக் கருள்புரிந்தாள் வான்.

இவ்வருணனையிலுள்ள,முப்புரிநூலும் முக்கோலும் எல்லா அந்தணர்களுக்கும் பொருந்தும். பொறையுடைமையும் நுண்ணுணர்வும்,உருவ வருணனையில் அடங்கமாட்டா. சீநிவாதன்,என்னும்பெயருடைய ஒருவனது வருணனையாகையால்,இது,தண்டியலங்காரத்தின்படி பொருட்டன்மையுள் அடங்குமென்றும், மாறனலங்காரம், பொருட்டன்மையினின்றும் மக்கட்டன்மையை வேருகப் பிரித்திருப்பது பயனற்றதென்றும் எண்ணலாகாது. ஏனெனில் மாறனலங்கார ஆசிரியர் பெண்பால்மக்கட்டன்மைக்கு உதாரணமாகக் காட்டியிருக்கிறசெய்யுள், மாதரைப்பொதுப்படவே வருணிக்கின்றது:—

> கூரெயிற்று ருண்கண்ணார் கொம்மை யிளமுலையார்
> வார்புருவத் தார்திலக வாணுதலார்—காரகத்தெம்
> மால்வரையா ரெண்ணிறந்தமா தருணின்ஞற்குறித்த
> கோல்வளையா ரரிறைவ கூறு.

இது, பொதுவாக எல்லாமாதர்க்கும் பொருந்தக் கூடிய வர்ணனையாவதுடன் அவ்வாறே கொள்ளப் பட்டிருக்கின்றதென்பதும்இச்செய்யுளில்கூறப்பட்டிருக்கின்றது. எனின்,

துண்டஞ் சிவந்திறகும் பச்சையாய்த் தொன்மைத்
கண்டம் பொலிய கவின்பெற் றனகிளியே [தார்

என்று சாதித்தன்மைக்கு வீரசோழியம்காட்டுகின்ற உதாரணத்திற்கும்இதற்கும் வேற்றுமையில்லை.இதுவுமன்றி,

> பரியரைத்தாய்த் திணிவயிரம்
> பயின்றுநிலங் கிளைமுதற்ருய்
> விரிசினைத்தாய்ப் பசுந்தழைத்தாய்
> விரைமலர்த்தாய் விழைகனித்தாய்ப்
> பெரியகதி ரவன்மறைந்த
> பிழம்பிருட்கு முறங்காது
> வரிவளையூர் புனற்குருகூர்
> மகிழ்மாறர் திருப்புளியே

என்னும் இவ்வருணனை புளியமரச் சாதிக்குப் பொருந்துவதோடு மரம் என்று இருப்பனவற்றிற்கெல்லாம் ஏற்றதுமாகும். ஆகையால்,

> இன்மை யிகழா தினத்திற் கொத்த
> தன்மையிட் டுரைப்பது சாதித் தன்மை

என, வீரசோழிய உரையில் காணப்படும் இலக்கணம் நமக்கு அதிகமும் உதவியாவதற்கில்லை. தண்டியலங்காரமும் அதனைத் தழுவிய வீரசோழியமும் வகுத்துரைக்கின்றபடி பொருட்டன்மை யென்பது உரு

வின் வருணனையாயின், (சிவபிரான், திருமால், நான்முகன், இந்திரன் போன்ற தனிக்கடவுளர்கள் தவிர) எப்பொருளின் உருவமும் அதன் இனத்திற்கொத்த தன்மையோடு விளங்குவது இன்றியமையாமைபற்றி, பொருட்டன்மைநவிற்சி யனைத்தும் சாதித்தன்மை நவிற்சியும் ஆதல் வேண்டும். இதனை உட்கொண்டே மாறனலங்காரத்தில் சாதித்தன்மை என்ற பிரிவு காணப்படவில்லை போலும்.

c. குணத்தன்மை:—

ஒரு பொருளின் உருவத்தை வருணிக்குங்கால், அப்பொருள் சேர்ந்திருக்கின்ற சாதியின் தன்மையும் அவ்வருணனையில் தோன்றவேண்டி நேர்கின்றதால், பொருட்டன்மைக்கும் சாதித் தன்மைக்கும் இடையே உள்ள எல்லையைத் தெளிந்து அறிவது மிகவும் அருமையாகிறது. குணத்தன்மை தொழிற்றன்மை என்று பிரிக்கின்ற பிரிவினுள்ளும் இவ்வகை ஐயந் தோன்றக் காண்கின்றோம்.

ஒன்றன் குணத்தை உள்ளபடி உரைப்பது குணத்தன்மை நவிற்சியணியாம் என்று கூறலாமாயினும், இதனின்று நாம் பெறத்தக்க உதவி மிகச் சிறியது. வீரசோழியத்தின் உரையில்,

மனத்தின் வாய்மையின் தொழிலின் வருமெனக்
குணத்தினைக் கிளப்பது குணத்தின் தன்மை

என்னும் இலக்கணம் காணப்படுகின்றது. ஆயினும், குணம் என்பது இன்னது என்று இங்கு வகைசெய்து கூறப்படவில்லை. ஆயினும், ஒரு குணம் ஒன்றற்கு இருக்கின்றதென்பது, மனதிலும் சொல்லிலும் தொழிலிலும் எவ்வாறு இயல்புறத் தோன்றுகின்றதென்று மிக நுட்பமாகவும் அழகாகவும் வருணிப்பதைக் குணத்தன்மை நவிற்சி யென்று கொள்ளலாம். எனினும், குணம் என்பது யாது என்னுங் கேள்வி இன்னும் எஞ்சிய இருக்கின்றது. முதலில் இதனை ஒருவாறு வகைசெய்து உணர்தல் வேண்டும். குணத்தன்மைநவிற்சிக்கு இலக்கண நூல்களில் காண்கின்ற உதாரணங்களை ஒப்பு நோக்குங்கால், உவகை காமம் வெகுளி அனைய மனத்தின் கிளர்ச்சிகளைக் குணம் என்று கொண்டு அன்னவைகளின் மெய்ப்பாடுகளை வருணிப்பது குணத்தன்மை நவிற்சியென்று அழைக்கலாம் எனத் தோன்றுகின்றது.

உள்ளங் குளிர வுரோமஞ் சிலிர்த்துரையுந்
தள்ளவிழி நீர்ததும்பத் தன்மறந்தாள்—புள்ளலைக்குந்
தேந்தா மரைவயல்சூழ் தில்லைத் திருநடஞ்செய்
பூந்தா மரைதொழுத பொன்

[மனம் குளிர, மயிர் சிலிர்க்க, மொழி தடுமாற, கண்களில் நீர்ததும்ப, பறவைகள் அலைக்கின்ற தேன்நிறைந்த தாமரைமலர் அடர்ந்த வயல்கள்சூழ்ந்த தில்லையம்பதியில் திருநடஞ் செய்கின்ற சிவபிரானது அழகிய தாமரைமலர் போன்ற பாதங்களைத்தொழுத பெண்ணனவள், தன்னை மறந்தவளானாள்]

இது பக்தியினால்பிறக்கும் பேர்உவகையாகிய குணத்தின் தன்மையைத் தக்க சொன்முறை தேர்ந்து வருணிப்பதால் குணத்தன்மை நவிற்சியணி யென்று தண்டியலங்கார ஆசிரியரால் கொள்ளப்பட்டிருக்கின்றது.

சீத்தலைச் சாத்தனார் இயற்றிய "மணிமேகலை" என்னும் நூலில் காணப்படும் அழகு கெழுமிய சிலஅடிகள் இச்செவ்வியில் ஆராயத்தக்கன.

கோவலனும் கண்ணகியும் உற்றகதிக்கு ஆற்றுதவளாகி அருந்துயர் உழந்த மாதவியின் மகள் மணிமேகலை தன் தோழி சுதமதியுடன் மலர்வனம் செல்ல, அம் மணிமேகலையின்பால் காமம் மிக வைத்திருந்த அரசிளங்குமரன் உதயகுமாரன், அவள் மலர்வனம் புகுந்திருந்ததறிந்து, அங்கு அவளை எய்தலாம் என மிக நயந்தனனாகி விரைந்து வருதலும், அவனது வருகையை உணர்ந்த சுதமதி, அருகிருந்த ஒரு பளிங்கினாற்செய்த அறையின்கண் மணிமேகலையை ஒளிந்து ஒதுங்கச்செய்துநிற்கக்கண்ட அரசிளங்குமரன், அச் சுதமதியை நோக்கி,

ஆருமி லொருசிறை
ஒருதனி நின்று யுன்றிற மறிந்தேன்
வளரிள வனமுலை மடந்தை மெல்லியல்
தளரிடை யறியுந் தன்மையள் கொல்லோ
விளையா மழலை விளைந்து மெல்லியல்
முளையெயி றரும்பி முத்துநிரைத் தனகொல்
செங்கய னெடுங்கண் செவிமருங் கோடி
வெங்கணை நெடுவேள் வியப்புரைக் குங்கொல்

[யாரும் இல்லாத ஒரு பக்கத்தில் தனியாக நிற்கின்றாய், உன் செய்தியைத் தெரிந்துகொண்டேன். வளர்கின்ற இளமை வாய்ந்த அழகிய முலைகளையுடைய மென்மை பொருந்திய மடந்தையாகிய மணிமேகலை, ஆடவர் காமத்தால் தளர்ந்திருக்கின்றசமயத்தைத் தான்தெரிந்து கொள்ளக்கூடிய பருவத்தை அடைந்திருக்கின்றாளோ? வாய்ப்பதற் கருமையாகிய மழலைச் சொற்கள் முதிர்ந்து, முளை போன்ற பற்கள் முத்துக் கோத்ததுபோல் அரும்பினவோ? சிவந்தகயல்போன்ற பெரிய கண்கள் காதளவு ஓடி (கடைக்கண்ணால் பார்த்து) விருப்பத்தைச் செய்கின்ற அம்புகளை எய்கின்ற மன்மதனது ஆச்சரியத்தை விளம்பக் கூடியனவோ]

என்று, காமத்தின் இயக்கம் அரும்புகின்றவர்பால் தோன்றுகின்ற தன்மைகளை மிக்க நுட்பமுடன் தேர்ந்து, அத்தகைய பருவத்தளோ மணிமேகலை என்ன அழகுற வினவுகின்றான். காமத்திற்கு இலக்காகக் கூடிய பருவத்தின் குணத்தைக் கூறுகின்றமையால் இதனைக் குணத்தன்மை நவிற்சி யென்னலாம்.

அன்னவாறு உதயகுமாரன் தன் உள்ளத்தைத் தெரிவித்தாலும், சுதமதி, தவவொழுக்கத்தை மேற்கொண்டுள்ள மணிமேகலையைக் கணிகையென நயத்தல் தகாதென்று நவின்று அவனை அகற்றியபின்னர், மணிமேகலை,

பளிக்கறை திறந்து பனிமதி முகத்துக்
களிக்கயல் பிறழாக் காட்சிய ளாகிக்
கற்புத் தானில ணற்றவ வுணர்விலள்
வருணக் காப்பிலள் பொருள்விலை யாட்டியென்
றிகழ்ந்தன னாகி நயந்தோ னென்னாது
புதுவோன் பின்றைப் போனதென் னெஞ்சம்
இதுவோ வன்னாய் காமத் தியற்கை
இதுவே யாயின் கெடுகதன் திறம்

[பளிக்கறையைத் திறந்து வெளிவந்து, குளிர்ந்த சந்திரன் போன்ற தன் முகத்தில் உள்ள களிப்புமிக்க கயல் போன்ற கண்கள் பிறழாமல் இரங்கிய பார்வையையுடையவளாகி, சுதமதியை நோக்கி, "கற்பில்லாதவள் நல்ல தவஉணர்வு இல்லாதவள், சாதிக்குரிய காவல் இல்லாதவள், என்ன மதித்து வெறும் ஒரு விலைமகளே என்று கொண்டு இவ்வாறு அவ்வரசிளங்குமரன் இகழ்ந்தவனாகி



என்னை நயந்தான். ஆயினும் அதனைப்பொருட்படுத்தாமல் அப் புதியவன்பின்னே என் நெஞ்சு தொடர்ந்து போயிற்றே. அம்ம, இதுவோ காமத்தின் இயற்கை. இன்னதேயாயின் கெட்டொழிக அதன் தன்மை]

என்றனள். தன்னை இகழ்ந்தனன் என்பது தெரிந்தும் அவனிடத்தில் மனத்தினைச் செலுத்துகின்ற காமத்தின்குணம் அதிநுட்பமாகத் தேர்ந்து கூறப்படுவதால், இதுவும் குணத்தன்மை நவிற்சியணியெனலாகும். காமம் என்னும் மன இயக்கத்தினை அதன் மெய்ப்பாடு கொண்டு முன்னைய உதாரணத்தைப்போல் இங்கு வருணித்திருக்கவில்லை யாதலின் இதனைக் குணத்தன்மை நவிற்சியென்று எங்ஙனம் கொள்வது என்னும் ஐயம் விளையலாம். ஆயினும், வீரசோழிய உரையில்,

எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்
நினைக்க வருவதொன் றுண்டு. [வார்

[தம்மால் காதலிக்கப்படுபவர் பிரிந்திருக்கின்ற காலத்திலும் அவர்தமை நினைக்கு மளவிலேயே இன்பம் விளைவதால், சேர்ந்தாலும் பிரிந்தாலும் எவ்வகையிலும் காமமானது இனியதாகிய ஒன்றேயாம்]

என்னும் குறள், குணத்தன்மை நவிற்சிக்கு உதாரணமாகக் காட்டப்பட்டிருப்பதைக்கருதுங்கால், இந் நவிற்சிக்கு மெய்ப்பாட்டின் வருணனை இன்றியமையாதது அன்று என எண்ண இடம் ஏற்படுகின்றது. இவ்வகையில்,

உள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தாற்
கள்ளினுங் காம மினிது

[கள் உண்டவர்க்கு மாத்திரம் இனிதாயிருக்கும், காமமோ நினைத்தாலும் நீங்காத பெரிய மகிழ்ச்சியை உண்டாக்குவதால், கள்ளினுங் காமம் இனியது]

என்னுங் குறளும் குணத்தன்மை நவிற்சியணிக்கு ஏற்ற உதாரணம் ஆகக் கூடும்.

மெய்ப்பாட்டுடன் காமத்தின் இயற்கையை வருணிக்கிற வேறுசில அழகிய அடிகளும் 'மணிமேகலை'யிற் காணலாம்.

மணிமேகலையும் மாதவியும் தவவொழுக்கம் பூண்டனராயினும், மாதவியின் தாயாகியசித்திராபதியோ, தங்குலக் கணிகைத்தொழிலைக் கைவிடலாகாதென்னுங் கருத்தினளாய், மணிமேகலையை எவ்வகையிலேனும் உதயகுமாரனுடன் சேர்த்துவிடவேண்டுமெனும் ஆர்வம்மிகுந்து அவன்பால் அணுகி, மணிமேகலை காமத்திற்குரிய பருவத்தளாயிருந்த தன்மையைத்தெரிவித்தலும், உதயகுமாரன் முன் மணிமேகலையைநாடி மலர்வனம்சென்ற அந்நாள் அவள்பளிக்கறையில்ஒளிந்து தன்னைக் கடைக்கண்ணில் நயந்து பார்த்துக் காமத்தால் வருந்திய நிலையைத் தானும், அன்று சுதமதியுடன் பேசிக்கொண்டே கண்டதுண்டெனை, இப்பொழுது சித்திராபதியிடம் பின்வருமாறு உரைக்கின்றான்:—

மேவிய பளிங்கின் விருந்திற் பாவையிஃ
தோவியச் செய்தியென் றொழிவேன் முன்னர்க்
காந்தளஞ் செங்கை தளைபிணி விடாஅ
வேந்திள வனமுலை யிறைநெறிரித் ததூஉ
மொத்தொளிர் பவளத் துள்ளொளி சிறந்த
முத்துக்கூர்த் தன்ன முள்ளெயிற் றமுத
மருந்தே மாந்த வாருயிர் தளிர்ப்ப
விருந்தின் மூர லரும்பிய தூஉ
மாயிதழ்க் குவளை மலர்புறத் தோட்டிக்
காய்வேல் வென்ற கருங்கய னெடுங்கண்
அறிவுபிறி தாகிய தாயிழை தனக்கெனச்
செவியகம் புகூஉச் சென்ற செவ்வியும்
பளிங்குபுறத் தெறிந்த பவளப் பாவையென்
னுளங்கொண் டொளித்தாள்.

[பளிங்கில் தோன்றிய புதியவொரு சித்திரம் இது என்று எண்ணி நீங்க நினைத்த என்முன், காந்தள் மலர் போன்ற செங்கைகளைச் சேர்த்துத் தன் மார்போடணைத்துச் சிறிது நெரித்ததும், பவளச் செப்பிற்குள் முத்துக்கள் முளைத்ததுபோல், அருந்துதற்கு அவாவிய எனது உயிர் தளிர்க்க வசீகரமான புன்னகை அரும்பியதும், குவளையையும் வேலையும் வென்ற அவள் கரிய கூரிய பெருங் கண்கள் கயல்போல் புரண்டு, "இப் பெண்ணின் மனம் காதலால் மாறித் தளர்கின்றது காண்" என்று காதோடு செப்பின வென்னக் கடைக்கண் நோக்கமும் உடையாளாய், பளிக்கறை தோன்றிய அப்பவளப்பாவை என்னுள்ளத்திற் புகுந்து ஒளிந்துகொண்டாள்]

மார்போடு கைகளைப் பிணித்து நெறித்தல் இளநகை யரும்பல் கடைக்கண்ணோக்கம் அனைய மெய்ப்பாடுகளால் காதலின் இயற்கையை மணிமேகலையின்பால் தான்கண்டதாக உதயகுமாரன் கூறும் இது குணத்தன்மை நவிற்சியணியாம்.

இப்படியே, உவகையும் காமமும் அன்றி, வெகுளி முதலிய பிற மனோவிகாரங்களும் அவைகளுக்கு உரிய மெய்ப்பாடுகளுடன் இயல்பட வருணிக்கப்படுகின்றவைகளும் குணத்தன்மை நவிற்சியாம். நளனோடு வடிய தமயந்தி.

தொண்டைக் கனிவாய் துடிப்பச் சுடர்நுதன்மேல்
வெண்டரள மென்ன வியர்வரும்பக்—கெண்டைக்
கடைசிவப்ப நின்றாள்.

[கொவ்வைக் கனிபோன்ற உதடுகள் துடிக்கவும், ஒளிபொருந்திய நெற்றியின்மேல் வெண்முத்துப்போல் வியர்வை அரும்பித் திரளவும், கெண்டைமீன் போன்ற கண்களின் கோடி சிவக்கவும் நின்றாள்]

என வருமிடத்து, சினத்தின்குணம் அதன் மெய்ப்பாடுகொண்டு வருணிக்கப்பெற்றிருத்தலால் இது குணத்தன்மை நவிற்சியணியாகும்.

ஏமாற வேண்டாம்
நேரில் பெற்றுக்கொள்க
ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை. 0-4-0
கோரோஜனை 0-6-0
பாலசஞ்சீவினி 0-4-0
பாலஸுதா டானிக் ரூ 1
40 நாட்கள்
போலிகள் இருப்பதால் வீதிகளில் வாங்க வேண்டாம்

# புளியந்தீவு நாகேசுரர் பதிகம்

போராழி நாப்பட் பிறங்குபுளி யந்தீவிற்
சேராதி நாதன் கவிசிறக்கக்—கூராழிக்
கையா னனத்தனடி காணுதான் பெற்றமுதற்
கையா னனத்தனடி காப்பு.

பூவாயிற் கொண்டு பொறியரவம் பூசைசெயுந்
தேவாழ் புளியூர்ச் சிவபெருமான்—பாமாலே
ஓதத் துணைபுரியு முள்ளத் துறைகலைமான்
பாதத் துணைபுரியும் பார்.

செந்தமிழ்ச்சொற் பூவாகச் சேருமன்பு நாராக
எந்தனொரு நாவே இருகரமாய்ப்—பந்தவினை
போக்கும் புளியூர்ப் புனிதன்பா மாலைசெயக்
காக்கும் குருமணிபொற் கால்.

நூல்

பொன்பூத்த கொன்றையுங் கூவிளமு மத்தமும்
புனல்பூத்த நதியு மதியும்
பொலிகின்றசடைமுடியு மலிகின்றமெய்க்கருணை
பொழிகின்ற சோதி முகமும்
தென்பூத்த வெண்ணீறு சண்ணித்த மேனியும்
திசைபூத்த காற்றோள்களும்
தீயமல வலிபோக முயலகன் முதுகிலே
திருநடனமிடு சரணமும்
மின்பூத்த கருணைப் பிராட்டியொரு பாதுமாய்
வெள்ளைவிடை மீதிலடியேன்
வெவ்வினைப் பிறவிப் பெரும்பிணியழித்தழிவில்
வீடுதர நாடி வருவாய்
நன்பூத்த போராழி நடுவிலே புளியூரில்
நன்றமர்ந் தருளு மிமையோர்
நாதனே உயர்ஞால போதனே யருண்மேவு
நாகேச்சுரக் கடவுளே. 1.

ஆழிசூ மூலகெலா மாகியே உடனுகி
அவைகட்கு வேறுமாகி
அருவாகி யுருவாகி யறிவாகி யொளியாகி
ஆனந்த நிறைவு மாகி
ஊழிதோ றலவாத வொன்று மிரண்டாகி
ஓரைந்து மையைந்துமாய்
ஓங்கார வடிவாகி யுளதாகி யிலதாகு
முன்னுடைய வுண்மை நிலையை
வாழியுன்னரு ளமுதமுண்டவர்க ளறிவார்கள்
மற்றவர்க ளறிய வசமோ
வற்றாத வருளமுத வாரிதனி லொருதிவலை
வறிய னேனுக்கு மருள்வாய்
நாழிநெற் கொண்டறம் வளர்த்த மரகத
வல்லிநாயகா புளியூரில் வாழ்
நாதனே உயர்ஞன போதனே
யருண்மேவு நாகேச்சுரக் கடவுளே. 2.

செம்பிற் களிம்பென்ன வென்னொடு கலந்தவத்
தீயமல வலியிருளிலே
செய்கை யுடனறிவிச்சை யற்று முழுமூடமாய்ச்
சிலைபோற் கிடந்த வெனையும்
பம்புபே ரருளினுல் மாயைதனி லொழியாத
பழவினைத் தொடர்பு நாடிப்
பயிலுமுடல் கருவியிட நுகர்வுதந் தொருவாறு
பற்றறிவு தொழில் விளக்கி
அம்புவியில் நல்லனவு மல்லனவு மறிவித்து
னடியடைய விடவதுமறந்
தையகோ பலகோடி பிறவியைப் பாழாக்கி
யவலித் தாற்றுகின்றேன்
நம்புதுணை கைவிட்ட வேழையைக் காத்தருளை
நல்குவாய் புளியூரில் வாழ்
நாதனே உயர்ஞான போதனே யருள்மேவு
நாகேச்சுரக் கடவுளே. 3.

எங்குமுன் னருளாணை எங்குமுன் னருளாடல்
எங்குமுன் னருள்விளக்கம்
எங்குமுன்னருளிறைமைஎங்குமுன்னருள்முறை
எங்குமுன்னருள் வெள்ளமாம் [மை
தங்குமவ் வருளான வெள்ளப்பெருக்கிலே
தலைமுழுகி நின்று மரணத்
தாகந் தணிக்காது பேய்த்தேரை நீரென்று
தலையால் நடந்திளைத்தேன்
அங்கங்கு நிகழ்கின்ற வவையவைவி லுனையறிந்
தனுபவிக்கின்ற சுவடொன்
றையனே யுமைமேவு மெய்யனே குருவாகி
அறிவிக்க வினிவருளுவாய்
நங்குமர மூர்த்தியா யானைமுகனும் மேவி
நல்லருள்செய் புளியூரில்வாழ்
நாதனே உயர்ஞான போதனே யருள்மேவு
நாகேச்சுரக் கடவுளே. 4.

தாமரைக் கண்ணனுந் தாதையூந் தம்மிலே
தம்பெருமை பேசியேசிச்
சண்டையிடுமமையத்தில்அவர்நடுவிலொருசோதி
தனிமேரு மலைபோல்வரக்
காமரன மாகியுங் கேழல்வடி வாகியுங்
கதிர்முடியு மடியு மறியார்
கண்பிசைந் தழுதுகைகட்டி முன்னிற்கநீ
காட்டு சிவலிங்க வடிவை
மாமறைசொல் வாயனும் மாயனும்
வானவரு மானவரு மாவு மாவும்
மாதவரும் மாதவிரும் புலியு மம்புலியும்
வந்திக்க வருள்கூருவாய்
நாமரைக் கணமேனும் வந்திக்கு மொருவரம்
நன்றருள்செய் புளியூரில் வாழ்
நாதனே யுயர்ஞான போதனே யருண்மேவு
நாகேச்சுரக் கடவுளே. 5

அங்கிங்கெ னுதெங்குமாய் நிறையு முன்கருணை
அருவுருவை வேற்றாசருக்
கஞ்சிப்பெயர்த் தெகினபுரியி லொருகொன்றை
நிழல் அன்பர்கள் மறைத்துவைக்கத்



தங்குமப் புண்ணியத் தலத்தினில்
முளைத்தெழுந் தானுவே சசிசேகரா
தற்பரா சாம்பசிவ சிற்பரா குஞ்சிதச்
சரணபவ மரணவினைதீர்
சங்கரா கங்காதரா வரகரா
சூல தாரியே காமாரியே
சம்புவே வெள்ளி வேதண்ட மணிகண்டனே
சாமகண்டா வகண்டா
நங்குறை முடிக்கவரு நம்பனே செம்பொனே
நல்லருள்செய் புளியூரில்வாழ்
நாதனே யுயர்ஞான போதனே
யருண்மேவு நாகேச்சுரக் கடவுளே. 6.

சிந்தையி லறிவெனுஞ் ஞிமிறன்பு மலரினிற்
சேர்த்திடு மருட்டேறலே
தேறலின் தெளிவே தெவிட்டாத மதுரமே
திகழ்மதுர மருளின்பமே
வந்தவரு ளின்பப் பெருக்கிலே
யெழுகின்ற மாறுவுளக் களிப்பே
மாசற்ற செம்பொனே யமுதசஞ் சீவியே
மலவிருடமிக்கு மொளியே
எந்தையின்னும் பிறந்திறந்துழலா
திவ்வேழைக் கிரங்க வருநாள்
எந்தநா ளெந்தநா ளென்னுடைய வாழ்நாளில்
எய்துநாளோ வறிகிலேன்
நந்தலறு துறைநயினை யருகுவளர்
புளியூரில் நாயகா விமையோர்தொழும்
நாதனே உயர்ஞான போதனே
யருண்மேவு நாகேச்சுரக் கடவுளே. 7.

முத்தொத்த பற்கள் சுரைவித்தொத்த
முறியொத்த முழுமேனி சருகொத்தது
முளையொத்த முதுகுவளை சிலையொத்த [தன
தெழின் மொய்ம்பு முழவொத்த முருடொத்
கொத்தொத் திருண்டகுழல் குயிலொத்த
திப்பொழுது கொக்கொத்த தூனெடுங்கிக்
கூடொத்த தினிமுதுமை குறுகியது புன்மனக்
கோதினுங் குறுகவில்லை
அத்தத்தி லாசையும் மங்கையர்
மயக்குமோ ரணுவளவு மாறவில்லை
ஆங்கார மெள்ளளவு மகலவிலை யேழைநா
னருள்பெறுவ தெக்காலமோ
நத்தொத்த பொற்களத் துமையம்மை
யிடமேவு நாயகா புளியூரில்வாழ்
நாதனே உயர்ஞன போதனே
யருண்மேவு நாகேச்சுரக் கடவுளே. 8.

மன்னுமடியர்க் கெளியனும் பெயர்சுமக்க
நீமண்சுமந் தடிசுமந்தாய்
மதிசுமந்தாய் கங்கைநதி சுமந்தாய் விறகு
மறுகிலே முடிசுமந்தாய்
பொன்னின் களத்திலே கறைசுமந்தாய்
வலியபோரில் வில்லடி சுமந்தாய்
புத்தவேடத்தர் கல்லெறி சுமந்தா யிவைகள்
போதாம லுதைசுமந்தாய்
என்னளவி லிப்பழிகள் சுமவாம லுன்னுடைய
விணையடி சுமக்க வருள்வாய்
ஈசனே சிவகாமி நேசனே தில்லையி
லெழுந்தருளு நடராசனே
நன்னுதற் கண்கொண்டு காமனை எரித்த
மறைநாயகா புளியூரில் வாழ்
நாதனே உயர்ஞான போதனே யருண்மேவு
நாகேச்சுரக் கடவுளே. 9.

செங்குருதி நீர்சோர விழியிடந் தப்பியுஞ்
சிறுவனைக் கறிசமைத்துஞ்
செல்வமனைவியை நல்கியும் பொய்யைமெய்
யென்று சீவனை மகிழ்ந்தளித்தும்
அங்குபல ருன்னுடைய திருவருளடைந்தார்கள்
அதுகண்டு நானு மடைதற்
காசைகொள்வது கானமயில் கண்டுவான்
கோழியாட விழைவது போலுமால்
தங்கு பேராசைக்கு வெட்கமிலை யென்னுமத்
தன்மையா லின்று நாயேன்
சாமியுன் திருவருளை வேண்டுகின்றேன்
சிறிதுதந் தென்னை யாளவருவாய்
நங்குஞ் சரக்குமர நாயகா புளியூரில்
நன்றமர்ந் தருளு மிமையோர்
நாதனே உயர்ஞான போதனே யருண்மேவு
நாகேச்சுரக் கடவுளே. 10.

அங்கணு போற்றி மறையந்தணு போற்றி
திசையம்பரா போற்றி விடைசேர்
அம்பிகாபதி போற்றி சம்புவே போற்றி
யெமையாளுடைய முதல்வ போற்றி
திங்க ளுறியசடைச் சங்கரா போற்றி
தென் தில்லை நடமாடி போற்றி
செங்கைமா னேந்துவர புங்கவா போற்றி
சிவசிவ மகாதேவ போற்றி
பொங்கரா பூசித்த புண்ணியா போற்றி
யற்புத நடபுராண போற்றி
பூதநாதா போற்றி வேதகீதா போற்றி
போக்கு வரவின்றி நின்ற
நங்கணுயக போற்றி யென்றுனைப் போற்றிசெய
நன்றருள்செய் புளியூரில்வாழ்
நாதனே யுயர்ஞான போதனே யருண்மேவு
நாகேச்சுரக் கடவுளே. 11.

199209

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

ரோமன்கத்தோலிக் கிறிஸ்தவர்களின் லோக குருவான ரோமாபுரியிலுள்ள மாதா போப்பையருக்குத் தினந்தோறும் உலகத்தின் எல்லாத் திசைகளிலுமிருந்து வரும் தபாற் கடிதங்களின் சராசரித் தொகை 23000.

* * *

இயற்கையின் விந்தை:—தென் ஆப்ரிக்காவைச் சேர்ந்த டர்பானில் கோழிகள் வசித்துவந்த ஒரு கொட்டகையில் ஒரு பெட்டைக்கோழி முட்டையிடும் தறுவாயிலிருந்தது. அச்சமயத்தில் அந்தக் கோழிக் கருகில்ஒரு பாம்பு ஓடி வந்தது. சிறிது நேரத்துக்குப் பிறகு பாம்பும் ஓடிவிட்டது. கோழியிட்ட முட்டையில் அப்படியே அந்தப் பாம்பின் வடிவம் பதிந்திருந்ததாம்.

* * *

செயற்கைப் பால்:—அமெரிக்காவில்ஒரு ரசாயன நிபுணர் ஒரு விதமான செயற்கைப் பாலைக் கண்டு பிடித்திருக்கிறார். இந்தப் பால் குழந்தைகளுக்குச் சீக்கிரம் ஜீரணமாவதோடு கூட நல்ல ருசியுள்ளதாயும் இருக்கின்றதாம். இந்தப் பாலை அதிகமாகக் குழந்தைகள் விரும்பிக் குடிக்கின்றனவாம். இந்தச் செயற்கைப் பாலில்வாதம் பருப்பும் தேங்காயும் இன்னொரு விதமான பருப்பின் மாவும் சேர்ந்திருக்கிறதாம். இந்தச் செயற்கைப் பாலுக்குக் கூடிய சீக்கிரத்தில் நல்ல கிராக்கி ஏற்படுமாம்.

* * *

புலால் உண்ணும் பூக்கள்:—லங்காஷயருக்குக் கணிமையிலுள்ள பிளாக்பூல் என்ற இடத்தில் சில விநோதமான புஷ்பங்கள் புஷ்பிக்கின்றன. அவற்றில் சில புஷ்பங்கள் மீன்களையும் பூச்சிகளையும்சாப்பிட்டு விடுகின்றனவாம். இவ்வாறே உலகில் சில இடங்களில் விநோதமான புஷ்பங்களிருக்கின்றன. ஜாவாத் தீவிலுள்ள சில புஷ்பங்கள் எலிகளின் ரத்தத்தைக் குடிக்கின்றனவாம். இன்னும் சில புஷ்பங்கள் பறவைகளையும் கொன்றுவிடுகின்றனவாம். இன்னொரு விசித்திரப் புஷ்பம் தன்னுடையவிஷக்காற்றினால் நாய்களைக் கொன்று விடுகின்றதாம்.

* * *

நெடியவர் சங்கம்:—இப்பொழுது உலகில்பற்பல சங்கங்கள் நிலவி வருகின்றன. இவை எல்லாவற்றிலும் விநோதமான "நெடியவர்சங்கம் ஒன்று யார்க்ஷையரில் இருந்து வருகிறது. இச்சங்கத்தின் அங்கத்தினர்கள் எல்லோரும் 6 அடிக்கு மேல் உயரமானவர்கள். உயரமானவர்கள்தான் இந்தச் சங்கத்தில் சேர்ந்துகொள்ளலாம். இந்தச் சங்கத்தார் வீடுகளிலும் ஹோட்டல்களிலும் சிறு அறைகள் இருக்கக்கூடாதெனக் கிளர்ச்சி செய்து வருகிறார்களாம். டிராம்களும் பஸ்வண்டிகளும் கூட உயரமாகக் கட்டப்படவேண்டுமென இவர்கள் கிளர்ச்சி செய்து வருகிறார்களாம்.

உடம்பை மூடுவது எதுவானாலும் அதுவே உடை என்று அனேகர் எண்ணிவிடுவது போல, மனிதர் கண்களுக்குப் பொதுவாக எல்லா இன்ஷூயரன்ஸ் பாலிஸிகளும் ஒரே மாதிரியாகத் தோன்றலாம். ஆனால், பகுத்தறிவும் அழகின் தரமும் தெரிந்தவர், உடை யெவ்வாறு தைக்கப் பட்டிருக்கின்ற தென்பதையும், அது நெடுங்காலமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற தையற்காரர் இடத்திலிருந்து வருகிறதா வென்பதையுங் கவனிப்பார்கள். 'நாஷனல்' பாலிஸிக்கு இந்தச் சிறப்பு முத்திரை யிருக்கிறது. கல்கத்தாவில் ஹெட் ஆபீஸ் உடைய

**நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பெனி லிமிடட்**

கொடுக்கின்ற ஒவ்வொரு பாலிஸிக்கும் முப்பது வருடத்திய திறமை வாய்ந்த இன்ஷூயரன்ஸ் காரியானுபவம் ஆதாரமா யிருக்கிறது.

அஸ்ஸெட்ஸ் 2½ கோடிக்கு மேல்
நடைமுதல் பிஸினஸ் 10 கோடிக்கு மேல்

ஏஜென்ஸி எடுத்துக்கொள்ள விரும்புகின்றவர் கீழ்க்காணும் விலாஸங்களுக்கு எழுதவும்.

ப்ரான்ச் ஸெக்ரடரி, நாஷனல் இன்ஷூயரன்ஸ் பில்டிங், 362. சைனாபஜார் தெரு, சென்னை.

ஆர்கனைஸிங் ஸெக்ரடரி, ஸப் ஆபீஸ், 171. ந்யூ ஸ்ட்ரீட், மதுரை.

சீப் ஏஜன்ஸி, ஆர்காட் ஸ்ரீநிவாசார் தெரு, பெங்களூர் ஸிடி.

நெருப்பு மோட்டார் விபத்துக்கள்,
அஸ்ஸோஸியேடெட் நாஷனல் ஃபையர் அண்ட் ஜனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பனியால் (லிமிடெட்) இன்ஷ்யூர் செய்யப்படும்.

**இண்டோ-கம்மர்ஷியல்**
**பாங்க், லிமிடெட்.**

**மாயவரம்**

சென்னை ஆபீஸ், 107. அரண்மனைக்காரத் தெரு,
பஜார் பிராஞ்சு, 260. சைனாபஜார் ரோட்,

**மதுரை, காரைக்குடி, விருதுநகர்,
கும்பகோணம், திருவாரூர்,
ஈரோடு, தூத்துக்குடி,
விஜயநகரம்,
புதுக்கோட்டை,
திருநெல்வேலி.**

சப்-ஆபீஸ்
சீர்காழி & சிதம்பரம்

எல்லா வகையான பாங்கி அலுவல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். நிபந்தனைகள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

S. N. N. சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்,
107. அரண்மனைக்கார தெரு, ஜி, டி. மதராஸ்.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்
சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.

**ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்**

மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.

**32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1**

இனும்! "காம சாஸ்திரம்" இனும்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor).